Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 12 ஆம் நாள் | ரபி ஆகிர் 17 | (28-9-61) | வியாழக்கிழமை | இதழ் 194

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2 மதுரை

# அவசரகால நிலைக்கு

## ரூ. 41 லட்சம் உபமான்யம்

### பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, புதன்

இன்று பார்லிமெண்டில் பாதுகாப்பு வெளிநாட்டு மந்திரி அவசரகாலம் சம்பந்தமான செலவு ரூ. 41,70,821 க்கு உபமான்யப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

வழக்கமான படைப்பிரிவுடன் அவசரகால நிதியின் கீழ் ஏற்பட்ட உள்நாட்டுப் பாதுகாப்புக்கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு ராணுவத் தொண்டர்படை தீவிர சேவைக்கழைக்கப்பட்டதற்கே இந்த மான்யத்துக்குக்காரணம் என விளக்கம் கூறப்பட்டது.

சமையற் காரர்களாகவும், தொழிலாளர்களாகவும், வெயிட்டர்களாகவும், சுத்தம் செய்பவர்களாகவும் சிவிலியன்களிடையேயிருந்து ஊழியர்கள வேலைக்கு அமர்த்தப்பட்டதாயும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தொடர்பு அதிகாரிக்கு ஏற்பட்ட செலவுக்காக ரூ. 83,500 உபமான்யம் ஒன்றும் கோரப்பட்டது.

### கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு சம்பள நிர்ணயம்

கொழும்பு, புதன்

தொழில் கார்ப்பரேஷன்களில் கடமையாற்றும் சகல கிரேடுகளிலு முள்ளவர்களுக்குச் சம்பள நிர்ணயப் பட்டியல் ஒன்றை கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார அமைச்சு கார்ப்பரேஷன்களின் தலைவரின் பார்வைக்கு அனுப்பியுள்ளது. இதுபற்றி அவருடைய அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டபின்னர் அமைச்சு பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளது.

இச்சம்பள நிர்ணயத் திட்டம் கந்தளாய் சீனித் தொழில் கார்ப்பரேஷன் தலைவர் திரு. என். ஐ. எல். ஜேன்ஸ்ஸினால் மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## கடாங்கா தூதுகோஷ்டி காங்கோ செல்லும்

எலிஸபெத்வில்லி, செப். 27

காங்கோ மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கடாங்காத் தூதுகோஷ்டி யொன்றை லியப்போல்ட்வில்லிக்கு அனுப்பிவைப்பதற்கு கடாங்கா 'அதிபர்' ஷோம்பே ஒப்புக்கொண்டுள்ளா ரென்றுஎலிஸபெத் வில்லியிலுள்ள ஐ. நா. பிரதிநிதி டாக்டர் ஒபிரியன் தெரிவித்தார்.

ஆனல் இதுபற்றி இதுவரை ஷோம்பே எதுவும் தெரிவிக்கவில்லை.

ஷோம்பே அனுப்பும் தூதுகோஷ்டி காங்கோ மத்திய அரசாங்கத்துடன் எதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தும் என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை யாயினும் கடாங்காவை காங்கோவுடன் இணைப்பது சம்பந்தமாகவே பேச்சுவார்த்தை நடைபெறுமென்று கருதுவதாக டாக்டர் ஒபிரியன் கூறினர்.

### சிறுபிள்ளைவாத தடுப்பு பிரசாரம்

கொழும்பு, புதன்

சிறுபிள்ளை வாதத்திலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றும் பொருட்டு சுகாதார இலாகா களுத்துறைப்பகுதியில் பிரசாரம் ஆரம்பிக்கவிருக்கிறது.

### ரூ. 20,000 கலாசார அமைச்சு வழங்கியது

கொழும்பு, புதன்

இந்துசமய விவகார ஆலோசனைக் குழுவுக்கு கலாசார விவகார அமைச்சு 20,000 ரூபாய் வழங்கியுள்ளது.

சமயவளர்ச்சிக்காக இப்பணம் கொடுக்கப்படுகிறது.

### யாழ்ப்பாணத்தில் நாற்காலிகள் திருட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் சென்ற சில நாட்களாக வராந்தையிலிருந்து நாற்காலிகள் பல திருட்டுப்போயின. இது பற்றிப் பொலிசார் நடவடிக்கை எடுத்து, சந்தேகத்தின்மீது ஒருவரைக் கைது செய்ததில், களவு போன பல நாற்காலிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்றைத் தவிர மற்ற கதிரைகள் சொந்தக்காரர்களால் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டுவிட்டதாயும், ஒன்றுமட்டும் யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் காரியாலயத்தில் இருப்பதாயும், சொந்தக்காரர் நேரில் போய்ப்பார்த்து, அடையாளம் காட்டி பெற்றுச் செல்லலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

### சூட்சமான களவு பொலிசார் தேடுகின்றனர்

ஜாஎல, புதன்

வெகு சூட்சமாகக் களவுகள் செய்துவரும் கொள்ளைக் கூட்டமொன்றை ஜாஎலப் பொலிசார் தேடிவருகின்றனர். ஜாஎலைக்கு வெளிப்புறத்திலுள்ள சிலர் ஒன்று சேர்ந்து தலைமறைவாக இருந்து ஜாஎலயில் களவுகள் செய்துவருவதாக ஜாஎலப் பொலிஸுக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஜாஎலயில் பலவீடுகள் வலோற்காரமாகத் திறக்கப்பட்டுக் களவாடப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான முறையில் பல வீடுகளில் திருடர் நுழைந்தனர். களவாடிய முறைகளும் ஒத்திருக்கின்றன. இக்கூட்டத்தினர், வீடுகளின் ஜன்னல் கம்பிகளை வளைத்துக்கழற்றிவிட்டு வீடுகளுக்குள் நுழைவர். சத்தமில்லாமல் இதைச்செய்துவிடலாம். பூட்டியிருக்கும் பெட்டிகளையும் அலமாரிகளையும் திறந்து இவர்கள் களவாடுவதில்லை. தோல்பைகளிலும், சட்டைப் பைகளிலும் திறந்தபெட்டிகளிலும் காணப்படும் விலை உயர்ந்த பொருள்களை இவர்கள் எடுத்துச் செல்வர்.

தமது விரல் அடையாளங்களையோ வேறு எந்த அடையாளங்களையோ விட்டுச்செல்லாது இவர்கள் அதிக ஜாக்கிரதையாக இருந்து விடுகிறார்கள். தாம் கையால் தொடும் பொருள்கள் அத்தனையையும் கிணற்றிலோ அல்லது மழையிலோ வீசிவிடுவார்கள். இதனல் அடையாளம் எதுவும் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது.

## இ. போ. சபை விசாரணை கமிஷன்

### அடுத்தமாதம் யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை போக்குவரத்துச் சபை அலுவல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்திவரும் விசாரணைக் கமிஷன் அடுத்த மாதம் 15, 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்ய விருக்கின்றது.

திரு. எம். பி. ஸி. பீரிசைத் தலைவராகவும் திரு. டி. சிவஞானத்தை காரியதரிசியாகவும் கொண்ட இக்கமிஷன் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் பகிரங்கமாக விசாரணை நடத்துமென்று தெரிகிறது.

பஸ் போக்குவரத்துச் சீர்கேடு குறித்து கமிஷனுக்கு ஏற்கனவேமகஜர்கள் அனுப்பிய பலர் இக் கமிஷன் முன்னிலையில் நேரில் சாட்சியமளிக்க அழைக்கப்படுவார்கள் என்று அறியப்படுகிறது.

## நாவாந்துறை கொலை வழக்கு

### இன்று தீர்ப்பு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்

நாவாந்துறை கொலைவழக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் மூன்றுவது நாளாக நேற்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது சம்பவம் நடைபெற்ற இடத்தின் படத்தை வரைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எம். லாஜர் சாட்சியமளித்தார். காலை 11 மணிக்கு வழக்கு விசாரணை ஆரம்பமானது.

நேற்றுக் காலை 11 மணியளவில் நீதியரசர் டாக்டர் தம்பையா, வழக்கறிஞர்கள், ஜூரர்கள் ஆகியோர் நாவாந்துறையில் கொலை நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டுத் திரும்பினர். அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் குழுமி நின்றூர்களெனினும், சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்ல அவ்வமயம்வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை. பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. லாஜர் அங்கு சம்பந்தப்பட்ட இடங்களைக் காட்டினர்.

திரும்பவும் நண்பகல் 12 மணிக்கு விசாரணை ஆரம்பமானபோது இருதரப்பு வழக்கறிஞர்களாலும் திரு. லாஜர் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

சென்ற பெப்ரவரிமாதம் 21ம் திகதி நாவாந்துறை பீச்ரோட்டில் வசிக்கும் முருகுப்பிள்ளை குலவீரசிங்கம் என்பவரைக் கொலைசெய்ததாக சின்னப்பன் சிவகுரு என்பவர்மீது இவ் வழக்குத் தொடரப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். திரு. ஆர். விசுவநாதன், திரு. ஜே. டபிள்யூ சைமன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. எஸ். ஆனந்தகுமாரசாமியுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் எதிரி தரப்பில் ஆஜரானர்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. நகுலேஸ்வரன் தமது தொகுப்புரையை நேற்று நிகழ்த்தினர். நேற்று தமது தொகுப்புரையை ஆரம்பித்த திரு. கே. வி. எஸ் சண்முகநாதன் இன்று அது முற்றுப்பெறுவதைத் தொடர்ந்து நீதியரசர் தொகுப்புரை நிகழ்த்துவார்.

இவ்வழக்கில் தீர்ப்பு இன்று அளிக்கப்படலாமெனத் தெரிகிறது.

இவ் விசாரணையின் போது பார்வையாளருக்கென மேற்குப்புறத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களின் முன் வரிசையில், சுவரோடு சாய்ந்துகொண்டு வழக்கு விசாரணையைக் கவனித்துக்கொண்டிருந்தவரை நீதியரசர் அழைத்து, "கோர்ட்டில்ஏதாவதுவழக்கில் நீர் சம்பந்தப்பட்டிருக்கிறீரா?" என்று கேட்டபோது, 'இல்லை' என்று அவர் பதில் அளித்தார். 'அப்படியானல் நீர் ஏன் அடிக்கடி இங்கு காணப்படுகிறீர்?,

(8-ம் பக்கம் பார்க்க)

## சட்டங்களை சிங்களத்தில் ஆக்க மசோதா

### பாராளுமன்றக் கூட்டத்தில் அங்கத்தினர் வற்புறுத்து

கொழும்பு, புதன்

இன்று அரசாங்கப்பாராளுமன்றக்கட்சி திரு. ஸி. பி. டி' சில்வா தலைமையில் கூடியது. முன்பு பாராளுமன்றக்கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்களை அமுல் நடத்த மந்திரிகள் எவ்விதநடவடிக்கையும் எடுக்கவில்லை என அங்கத்தினர்கள் அப்போது முறைப்பாடு செய்துகொண்டார்கள். இவற்றைத் தாமதமின்றி நிறைவேற்ற பொருத்தமான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் கூறினர். இது சம்பந்தமாக பொருத்தமான உபகமிட்டிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டது.

சட்டங்களைச் சிங்களமொழியில் ஆக்குவதுபற்றிய மசோதாவை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் சில அங்கத்தினர்கள் வற்புறுத்தினர்.




உ
சிவமயம்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான
கோடியர்ச்சனை விஞ்ஞாபனம்

ஆரம்ப தினம்: 23—10—61
பூர்த்தி தினம்: 5—2—62

இந்த அர்ச்சனையில் யந்திரத் தகடு வைத்து பூஜை செய்து கொடுக்கப்படும்.

சி. பாலசுப்ரமணியக் குருக்கள்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## காமெரா திருத்துதல்

உங்கள் 'காமெரா'க்கள் எதுவாயிருந்தாலும் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் திருத்துவதற்கு, 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

சிறு வியாபாரமோ, கைத்தொழிலோ நடாத்தக் கூடிய இரு அறைக்கடையும் வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டுமே தங்க வசதி உண்டு. விபரத்திற்கு: எஸ். வேலுப்பிள்ளை, வியாபாரம், 478, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## கண்டக்டர்களுக்கு சம்பள நிர்ணயசபை

கொழும்பு, செவ்.

தோட்டக் 'கண்டக்டர்களுக்கு என சம்பள சபை ஒன்றை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கும்படி, மராமத்து தேசிய சேவை பதில் மந்திரி திரு. எம். பி. டி. ஸட். சிறிவர்த்தன மராமத்துக் கமிஷனரைக் கேட்டுள்ளார்.

இதனால் தோட்டக் கண்டக்டர்கள் 5,000 பேருக்கு லாபமளிக்கும் என மந்திரி கூறியுள்ளார்.

## புதிய யோக்ஷயர் விடுதியில்

### இலங்கைமாணவர் தங்குவர்

லண்டன், செப். 26

வெளிநாட்டு மாணவர்களுக்கு பிரிட்டனில் 9 ஆவது மெதடிஸ்ட் அகில உலக இல்லம் யோக்ஷயர் துறைமுகத்தில் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படும்.

இப்புதிய இல்லத்தில் மாணவர்கள் குடியிருக்கிறார்கள். ஆறு பிரிட்டிஷ் மாணவர்களுடன் உகண்டா, கெனியா, வடக்கு, தெற்கு ரொடேஷியா, சீராலியோன், பாகிஸ்தான், தங்கனிக்க, நைஜீரியா, கானா, மோரிஷஸ், எத்தியோபியா ஆகிய நாடுகளின் மாணவர்கள் குடியிருக்கிறார்கள்.

இவ்விடுதியில் 32 மாணவர்கள் தங்குவதற்கு வசதிகள் உண்டு. இம் மாணவர்களுள், சொற்ப விகிதம் பிரிட்டிஷ் மாணவர்களும் மற்ற ஏனையோர் வெளிநாட்டு மாணவர்களுமாயிருப்பர், இங்கிலையமும் அகில உலக இல்லங்களின் கொள்கை ஆதரவுடன்தான் நிறுவப்பட்டது. இடவசதியளிப்பது மாத்திரமல்லாது ஒருவரையொருவர் அறிந்துகொள்ளவும் மற்றவர்களின் வாழ்க்கைத் தராதரத்தை அறியக் கூடிய சந்தர்ப்பத்தையும் அளிக்கிறது.

இங்கிலையம், பல்கலைக்கழகம், தொழில் நுட்ப, வர்த்தக, ஓவியக் கலைக் கல்லூரிகள், முதலியவற்றிற்கு அண்மையிலிருக்கிறது. தாதிகள் இல்லத்தை 23,000 பவுண்டுகள் செலவழித்து இல்லமாக்கப்பட்டது. இங்கிலையத்தில் 14 தனிப்பட்ட படிக்கும் படுக்கையறைகள், 9 இருவர் படிக்கும் படுக்கையறைகள் உள்பட உணவருந்தும் அறை, விருந்தினர் அறை, வாசிகசாலை, விளையாட்டுக்கூடம் முதலியவை உண்டு.

இங்கிலையம் 18,000 பவுண்கள் செலவழித்து பெருப்பித்துக் கட்டப்படும். 1962ம் ஆண்டில் எல்லாம் கட்டி முடிந்து தயாராக இருக்கும்.

## 'கரம்' ஆட்டப் போட்டி

மன்னார், புதன்

மன்னார் அரசாங்க சேவைச் சங்கத்தின் 'கரம்' ஆட்டப் போட்டில் திரு. கே. சற்குணலிங்கம், திரு. எஸ். யூசுபை தோற்கடித்தார். திரு. அகஸ்தின்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## சாம்ராஜ்ய கூட்டத்தில் இலங்கை சாரணத் தலைவர்கள்

லண்டன், செப். 27

இலங்கை, அவுஸ்திரேலியா, கனடா, ஸைப்ரஸ், கானா, இந்தியா, சம்மேளன மலேயா, நியூஸிலந்து, நைஜீரியா, பாகிஸ்தான், பிரிட்டன் ஆகிய சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து 32 பிரதிநிதிகள் லண்டனில் நாளை வியாழக்கிழமை நடைபெறும், இரண்டாவது சாம்ராஜ்ய சாரண மாநாட்டிற்குச் சமூகமளிப்பர்.

இம்மாநாடு, சாரணப் பிரச்சினைகள், பரஸ்பர உதவி, முதலியன பற்றியதாகவே இருக்கும். தலைமைக் காரியாலய கமிஷனர், திரு. ஆர். ஸி. எஸ். கூக், லண்டனில் இலங்கைச் சாரணரின் கூட்டுறவுக் கமிஷனர், திரு. ஏ. பி. கொஸ்மொஸ் மாவட்ட கமிஷனர், திரு. ஏ. ஈ. கியூ. கெலிங், முதலியோர் இலங்கையின் சார்பில் இம்மாநாட்டில் பங்குபற்றுவர்.

இம் மாநாடு பேடன்-பாவல் இல்லத்தில் தான் நடைபெறும். உலகிலிருக்கும் சாரணர்கள் யாபேரும் ஒவ்வொரு வருடமும் லண்டனிலோ, அல்லது லண்டனுக்கு ஊடாக செல்பவர் இந்த இல்லத்தில் தங்கக் கூடிய எல்லா வசதிகளும் உண்டு.

சாரண இயக்கம் 1908-ம் ஆண்டில் லோட் பேடன் பாவலால் பிரிட்டனில் தொடங்கப்பட்டது. இன்று இது உலகம் முழுவதும் பரவி 8,500,000 அங்கத்தவர்கள் கொண்ட குழுவாயிருக்கின்றது. சுதந்திரமற்ற நாடுகள் உட்பட சாம்ராஜ்யத்தில் மாத்திரம் 1,800,000 சாரணருக்கு மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள்.

சாம்ராஜ்ய குழுக்கள் ஒவ்வொரு குழுவுடனும் நிரூபம் மூலம் தங்கள் கருத்துக்களைப் பரிமாறி, இணக்கத்தையும் நிர்வகித்துக்கொள்ளத் தக்கதாக தொடர்பு வைத்திருப்பர். முதல் சாம்ராஜ்ய சாரணர் மாநாடு இரு வருடங்களுககு முன் புது டில்லியில் நடைபெற்றது.

## ஆஸ்பத்திரி பூட்டப்பட்டது

### அவதூறு காரணம்!

தெனியாயா, செவ்வாய்

இங்குள்ள ஆஸ்பத்திரியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை வேலை ஸ்தம்பித்தது. ஆஸ்பத்திரியை அடித்துப் பூட்டிவிட்டு டாக்டர்கள், அப்போதிக்கரிமார், தாதிமார், குமாஸ்தாக்கள் ஆகிய எல்லோரும் ஆஸ்பத்திரியை விட்டு வரல்லா பொலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தஞ்சம் புகுந்தனர்.

ஆண் கங்காணி ஒருவர் பெண் கங்காணியை அவதூறுகப் பயமுறுத்திப் பேசிய தன் காரணமாகவே பரபரப்பு நிறைந்த இச்சம்பவம் நடைபெற்றது.

## க்ஷயரோகிகள் அறியவேண்டியன துண்டுப் பிரசுரத்தில் விளக்கம்

கொழும்பு, புதன்

'எது செய்யவேண்டும் எதை செய்யக்கூடாது' என்ற தலைப்பில் அரசாங்க சகாயப்பணம் பெறும் சகல க்ஷயரோகநோயாளர்களுக்கும் சில விஷயங்களை விளக்கும் வகையில் ஒரு துண்டுப் பிரசுரத்தை சுகாதாரப் பகுதியினர் வெளியிட்டுள்ளனர்.

க்ஷயரோகிகள் தமது சகாயப் பணம் பெறுவதற்காக கச்சேரிகளில் அதிகமாகக் கூடுவதைத் தடுக்கவும் இவ்விதம் பெறும் பணத்தை முறையான வழியில் அவர்களைப் பயன்படுத்தச் செய்வதற்குமே இந்த துண்டுப்பிரசுரம் வெளியிடப் பெற்றுள்ளது.

## உதை பந்தாட்டத்தில் குருநகர் வெற்றி

மன்னார், புதன்

அண்மையில் புனித சவேரியார் விளையாட்டுத் திடலில் புனிதசவேரியார் கல்லூரி மாணவ கோஷ்டியினருக்கும் குருநகர்ப் புனிதவளவனார் கழகக் கோஷ்டியினருக்கும் நடைபெற்ற உதைபாந்தாட்டப் போட்டியில் குருநகர்ப் புனிதவளவனார் கோஷ்டி 2 கோலும் புனித சவேரியார் கோஷ்டி 1 கோலும் பெற்றன.

திரு. செபரட்டினம் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

விற்பனையாகிறது!

N. P. T. A. & N. C. T. T. A.
5ஆம் வகுப்புப் பரீட்சை 1961
தமிழ்
மேற்படி பாடத்தில் தவறாது சித்தியடைவதற்கு
கலைவாணியின்
தமிழ்மொழிப் பயிற்சி
DESK WORK IN TAMIL

5ஆம் வகுப்புப் பாடநூலைப் படிக்கத் தவறாதீர்கள். அநேக விளக்கங்கள், மாதிரி அப்பியாசங்கள் பட்டங்கள் மூலம் கொடுக்கப்பட்டுள்ளன.

விலை 1-80

கலைவாணி புத்தக நிலையம்
10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
130, திருக்கோணமலை வீதி, கண்டி.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J. D. 3

# மேற்கு நாடுகளின் மிரட்டல் ஆபத்தை கொண்டுவரும்

## ஐ. நா. சபையில் குரோமிக்கோ எச்சரிக்கை

### சமாதான ஒப்பந்தத்தை மீண்டும் வலியுறுத்துகிறார்

நியுயோர்க், செப். 27

"மேற்கு பேர்லினில் சுதந்திர போக்கு வரத்துக்கு சோவியத் ரஷ்யா தடை விதிப்பதாக மேற்கு நாடுகள் குற்றம் சாட்டுவது தவறு" என்று சோவியத் வெளி விவகார மந்திரி திரு. குரோமிக்கோ ஐ. நா. மகா சபையில் பேசுகையில் கூறினர்.

மேற்கு பேர்லின் வெளியுலகுடன் சுதந்திரமான தொடர்புகள் கொண்டிருப்பதை பாதுகாக்கவே சோவியத் யூனியன் விரும்புகிறதென்றும் வெளியுலகுடன் மேற்கு பேர்லின் சுயேச்சையான தொடர்பு கொள்வதற்கு பேர்லின் ஐ. நா. படையோ அல்லது நடுநிலைமை நாடுகளின் படையோ நிலை கொள்வதைவிரும்புவதாகவும் திரு. குரோமிக்கோ தெரிவித்தார்.

#### ஒப்பந்தம் வேண்டும்

பேர்லின் நிலைமை சம்பந்தமாக மேற்கு நாடுகளும் சோவியத் யூனியனும் இவ்வருட முடிவுக்குள் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டுமென்றும் இதற்கு மேற்கு நாடுகள் ஒப்புக்கொள்ளா விட்டால் இவ்வருட முடிவுக்குள் கிழக்கு ஜேர்மனியுடன் சோவியத் யூனியன் தனியாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்ற திரு. குருஷ்சேவின் திட்டத்தை திரு. குரோமிக்கோ மீண்டும் வலியுறுத்தினர்.

பேர்லின் சம்பந்தமாக மேற்கு நாடுகளின் அர்த்தமற்ற பயமுறுத்தல் பேச்சிலும் செயலிலும் ஆபத்தானஎல்லையைத் தாண்டக்கூடிய கட்டம் ஏற்படாதென்று நம்ப முடியாதுஎன்ற திரு.குரோமிக்கோ கூறினர்.

கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் சோவியத் வெளி விவகார மந்திரி குறிப்பிட்டார்.

படைகுறைப்பு பற்றி திரு. குரோமிக்கோ பேசுகையில் படைகுறைப் சம்பந்தமாக நடைபெறும் பேச்சு வார்த்தையில் நடுநிலைமை நாடுகளும் கலந்து கொள்ள வேண்டுமென்று கூறினர்.

படைகுறைப்பு பேச்சு வார்த்தைகளுக்கு முன் அணுஆயுத சோதனைகளை நிறுத்தவேண்டுமென்ற யோசனையை திரு. குரோமிக்கோ நிராகரித்தார்.

திரு. ஹமர்ஷீல்டின் மரணத்தினல் காலியான தலைமைக் கரியதரிசி பதவிக்கு புதிய நியமனம் பற்றி ஐ. நா. மகா சபை முதலில் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற மேற்கு நாடுகளின் யோசனை முறையற்றது என்றும் பாதுகாப்புச் சபை தான் இதை முதலில் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் திரு. குரோமிக்கோ கூறினர்.

தலைமைக் காரியதரிசி ஒருவருக்குப் பதிலாக 'மூத்தரப்பு' நிர்வாகக் குழு கடமையாற்றுவதால் ஒன்றும் மோசம் வந்துவிடாது என்று திரு. குரோமிக்கோ தெரிவித்தார்.

# கடாங்காவிலுள்ள ஐ.நா. படைகள் முற்ருகவெளியேறவேண்டுமாம்

எலிஸபெத்வில்லி, செப் 27

காடங்காவில் சண்டையை நிறுத்துவதற்கு ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரியம், ஷோம்பேயும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி சண்டைநிறுத்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட நால்வர் கொண்ட கமிஷனின் கூட்டம் நேற்று முதல்தடவையாகக் கூடியது.

இக் கூட்டத்தில் பூர்வாங்க பேச்சுகள் நிகழ்த்தப்பட்டதாக கமிஷனின் அங்கத்தவர்களுள் ஒருவரான திரு. கிலாரி தெரிவித்தார்.

கடாங்காவிலிருந்து ஐ. நா. படைகள் முற்ருக வாபஸாக வேண்டுமென தாம் கூறியதாக கமிசஷனிலுள்ள கடாங்கா பிரதிநிதி பின்னர் தெரிவித்தார். ஐ. நா. படைகள் கடாங்காவிலிருந்து முற்ருக வாபஸாகும்பிரச்சினை முதலில் தீர்க்கப்படாமல் மேற்கொண்டு எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்துவதில் அர்த்தமில்லை. என தாம் கூறியதாக அவர் தெரிவித்தார்

## விமானங்கள் வந்துசேர்ந்தன

லியப்போல்ட்வில்லி, செப்.27

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு உதவிபுரிவதற்காக எதியோப்பிய அரசாங்கம் அனுப்பிய நான்கு 'ஜெட்' போர்விமானங்களில் இரண்டு விமானங்கள் கங்கோ வந்து சேர்ந்துவிட்டன.

## இந்திய-அமெரிக்க நிதிமந்திரிகள் சந்திப்பு

வாஷிங்டன், செப். 27

இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று வாஷிங்டனில் அமெரிக்க நிதி மந்திரியையும் உலக வங்கித் தலைவரையும் சந்தித்துப் பேசினர்

## தொழில் கோர்ட் நீதிபதிகள்

### உதவி கமிஷனர்களுக்கு அதிகாரம்

கொழும்பு, புதன்

தொழிற் தகராறுகள் பற்றி விசாரணை செய்யும் தொழிற் கோர்ட்டுகளில் நீதிபதியாகக் கடமையாற்றுவதற்கு உதவித் தொழில் கமிஷனர்களுக்கு அதிகாரம் வழங்கக் கோரும் மசோதா வொன்றை கொண்டுவருவது பற்றி தொழில் தேசியமய சேவை அமைச்சு பரிசீலனை செய்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் தேங்கிக் கிடக்கும் தொழிற் தகராறுகள் பல வற்றை துரிதமாக பைசல்செய்ய முடியுமெனக் கருதப்படுகிறது.

தொழிற் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதில் காலதாமதம் ஏற்படுவதாக சமீபத்தில் பலர் தொழில் அமைச்சைக் கண்டித்திருந்தனர்.

சுன்னுகம், புதன்

சுன்னுகம் மயிலினி சிவன் கோவில் கூட்டுவழிபாட்டுச் சபை ஆண்டுவிழா 29-9-61 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறும். உதவி வித்தியாதிகாரி திரு. சி. உ. சோமசேகரம் தலைமை வகிப்பார்.

## இனவளர்ச்சிக்கு சமுதாய ஒற்றுமை அவசியம்

### வேலணையில் பாரதிவிழா

ஊர்காவற்றுறை, புதன்

ஓர் இனம் வளர்ச்சியடைய வேண்டுமானல் சமுதாயத்தில் ஒற்றுமை அவசியமாகுமென சமசமாசக் கட்சிப் பிரமுகர் திரு. ஆனந்தசங்கரி சென்ற ஞயிற்றுக் கிழமை வித்துவான் இ. பொன்னையா தலைமையில் வேலணையில் நடைபெற்ற பாரதி விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"இந் நாட்டில் சாதி வேற்றுமை இருப்பது வருந்தத்தக்கது. அன்று செய் தொழில் வேற்றுமை காரணமாக ஒவ்வொரு பிரிவினர் தோன்றினர்கள். அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு 'யான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன்' என்று கூறுவது அறியாமையேயாகும்"

ஹமர்ஷீல்ட் மரணம்

# தீப்பிடித்ததால் குண்டு பாய்ந்திருக்காது

## விமானத்தின்மீது சுடப்பட்டிருக்கிறது

### சுவீடிஷ் நிபுணர்கள் கருத்து

லியப்போல்ட்வில்லி, செப். 27

ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் மரணத்துக்கு காரணகாக விருந்த விமான விபத்தில் உயிர் நீத்த மற்றொருவருடைய சடலத்தில் காணப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் விமானத்தில் பிடித்த தீயினல் விமானத்திலிருந்த வெடி மருந்துச் சாமான்கள் வெடித்ததினல் பாய்ந்திருக்கக்கூடும் என்று விபத்து பற்றி விசாரணை நடத்திய வட ரொடிஷிய அரசாங்கம் நியமித்த விசாரணைக் கமிஷன் தலைவர் தெரிவித்த கருத்தை சுவீடன் வெடி மருந்து நிபுணர் மறுத்துள்ளனர்.

விமானத்தில் வைக்கப்பட்டிருந்த வெடி மருந்துச் சாமான்களில் தீப்பிடித்ததன் காரணமாக அவைகள் வெடித்துப் பாய்ந்திருந்தால் அதன் வேகம் ஒரு துணியைக் கூடத் துளைத்திருக்க முடியாது. துணியைத் துளைக்கும் வேகம் கூட இருக்கமுடியாத அக்குண்டுகள் உடலுக்குள் பாய்ந்திருக்குமென்று சொல்வது அர்த்தமற்ற விளக்கம் என்று அந்த நிபுணர்கள் கூறியுள்ளனர்.

#### யந்திர துப்பாக்கி சுட்டிருக்கிறது

யந்திர துப்பாக்கியால் சுடப்பட்டு அந்தத் துப்பாக்கியிலிருந்து பாய்ந்த குண்டுகள் தான் உடலைத் துளைத்து உட்சென்றிருக்கிறது என்று சுவீடன் வெடி மருந்து நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் சிக்கிய விமானயதின் சொந்தக்காரர்களாகித் சுவீடன் விமானக் கம்பனியின் டைரக்டர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில், யந்திரத் துப்பாக்கியால் விமானம் சுடப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ளார்.

விமான விபத்து பற்றி ரொடிஷிய விசாரணைக் கமிஷன் நடத்திய விசாரணை முறை தமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளதாகவும் விமானக் கம்பனி டைரக்டர் தெரிவித்துள்ளார்.

விபத்து பற்றி ஆராய்வதற்குச் சென்ற சுவீடன் விசாரணைக் கோஷ்டி அங்கு வெறும் பார்வையாளர்களாகவே இருக்க வேண்டி நேர்ந்ததென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கடற்கரையில் 15 பேர் கைது

மன்னுர், புதன்

சிலாபத்துறைக்குச் சில மைல்கள் தூரமான கடற்கரைப் பகுதியில் இரவில் வள்ளத்தில் சட்டவிரோதமாக வந்திறங்கியதாகச் சந்தேகத்தின் மீது பிடிக்கப்பட்ட 15 பேர் மன்னுர்ப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் தலைமன்னுர் குவாரன்டைன் முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்

## நவிண்டிலில் 'கற்பரசி சாவித்திரி'

உடுப்பிட்டி, திங்கள்

நேற்று இரவு நவிண்டிலில் ஜனசமூக நிலையத்தின் ஆதரவின் கீழ் "கற்பரசி சாவித்திரி" என்ற நாடகம் நடந்தேறியது. தலைமைதாங்கிய கலையரசு கே. சொர்ணலிங்கம் நடிக, நடிகையரைப் பாராட்டினர்.

## நோய் பரவுகிறது

முள்ளியவளை, புதன்

மழை பொழிய வேண்டிய இக்காலத்தில் கடும் வரட்சி நிலவுவதால், இப்பகுதிகளில் பெருமளவில் நோய்களும் பரவுகின்றன.

வயிற்றுளைவு, காய்ச்சல். கண்நோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முதியவர்கள் தொகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டிருக்கிறது

# ராஜன்பாபு-ராஜாஜி தீர்ப்புக்கு விடவேண்டும்

## பஞ்சாபிசுபா பிரச்னை: அகாலிடால் புதிய கோரிக்கை

அமிர்தசரஸ்,செப். 27

பஞ்சாபி சுபா பிரச்சினையை ராஷ்டிரபதி ராஜன்பாபு, சுதந்திரக் கட்சித் தலைவர் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஆகிய இருவரின் மத்தியஸ்த்துக்கு விட வேண்டுமென்று அகாலிடால் இயக்கத்தின் காரியக் கமிட்டி கேட்டுள்ளது.

ராஜாஜி ராஜன்பாபு ஆகியோர் மத்தியஸ்தத்துக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் அவர்களிருவரும் மூவர் கொண்ட ஒரு கமிஷனை நியமித்து அதன் தீர்ப்புக்கு இப்பிரச்சினையை விடலாமென்றும் காரியக் கமிட்டி கேட்டுள்ளது.

பஞ்சாபி சுபா பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது என்று அகாலிடால் இயக்கத்தின் ஆலோசகர் திரு. குர்னுன்சிங் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சீக்கியருக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படுகிறதா என்பதை விசாரிப்பதற்கு ஒரு கமிஷனை நியமிப்பதாகப் பிரதமர் நேரு கூறிய யோசனைக்கு இணங்க அகாலிடால், சிலருடைய பெயரை கமிஷனின் அங்கத்தவர்களாக நியமிப்பதற்குக் கூறியதாகவும் இப்பெயர்களை அரசாங்கம் நிராகரித்து விட்டதாகவும் கமிட்டியில் தெரிவிக்கப்பட்டது.

44-வது தினமாக உண்ணுவிரதமிருக்கும் மாஸ்டர் தாராசிங்கின் உடல் நிலை மிக அபாயகரமான நிலைமையை அடைந்துள்ளதாக நேற்று மாலை வெளியான வைத்திய அறிக்கையொன்று கூறுகிறது.

மாஸ்டர் தாராசிங் நிம்மதியில்லாது இரவில் அவதிப்பட்டாரென்றும் அறிவிக்கப்படுகிறது.

மாஸ்டர் தாராசிங்கின் உண்ணுவிரதத்துக்கு போட்டியாக உண்ணுவிரதமிருக்கும் யோகிராஜ் சூரியதேவின் உடல் நிலையும் மிகமோசமாக உள்ளதாக டாக்டர்களின் அறிக்கையொன்று கூறுகிறது.

## தாலி கிடைத்தது

உடுப்பிட்டி, புதன்

வல்லிபுர ஆழ்வார் கோவில் தீர்த்தோற்சவத்தன்று தவறிப் போன ரூபா 1,500 பெறுமதியான தாலிக்கொடி கண்டெடுக்கப்பட்டுவிட்டது. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திரு. வி. நடராஜாவின் பாரியாரின் தாலியே இது. கண்டெடுத்துத் திருப்பிக் கொடுத்தோரை பருத்தித்துறைப் பொலிசார் பாராட்டினர்.

## உடுப்பிட்டிப் பகுதி வித்தியாதரிசி

உடுப்பிட்டி, புதன்

இதுவரை வடமராட்சிப் பகுதி முழுவதற்கும் பாடசாலை வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய திரு. எம். கேதுசிகாமணி இப்பொழுது உடுப்பிட்டிப் பகுதிப் பாடசாலைகளின் வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மணிவாக்கு

ஓர் உண்மைக் கருத்து எழுந்தால் அது உலகம் முழுவதையும் ஆட்கொண்டுவிடும். அது என்றுமே வீணாகாது. ஒவ்வொரு சமய உண்மையும் இப்படித்தான் பரவியிருக்கின்றது.

—விநோபாஜி.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 12 உ. (28-9-61)

EEL NADU: National Tamil Da y Post Box 49, Jaffna Telegarms EELA NADU Jaffna Phone: 389.


## குடியிருக்க வீடுகள்

வேலணையிலே ஓர் இளம் தம்பதிகளுக்கு குடியிருக்க வீடில்லை. சொந்தத்தில் நிலமும் இல்லையாம். அரசாங்கத்தின் வசம் அதிகமான காணி தரிசாகக்கிடப்பதாயும், தாங்கள் சொந்தச் செலவில் வீடுகட்டிக் கொண்டு வசிக்க இடம் கொடுக்க வேண்டுமென்றும் அவ் வாலிபர் அரசாங்கத்துக்கு மனுச் செய்துள்ளதாயும் ஆனால் உதவியான பதில் இதுவரை கிடைக்காமலிருப்தாயும் ஓர் அன்பர் தெரிவிக்கிறார். இதே மாதிரி பல வாலிபர்கள் புதுக் குடும்பம் ஆரம்பிக்க வீடின்றிச் சங்கடப்படுவதும் பகிரங்கரகசியம்.

ஜனத்தொகையோ வரவர வேகமாக அதிகரித்து வருகின்றது. அதிகரிக்கும் மக்களுக்கு அதிக வீடுகள் தேவை. அரசாங்கமும் ஸ்தலஸ்தாபனங்களும் தங்கள் சொந்தப் பொறுப்பில் ஒருசில வீடுகளைக் கட்டித்தரலாம். ஆனால் தேவையான வீடுகளை எல்லாம் கட்டித்தர அவர்களால் முடியாத காரியம். ஆகவே தனிப்பட்டவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் வீடு கட்டிக் கொள்ளவிரும்பினால் அவர்களுக்குக் கூடுமான உதவிகளைச் செய்து கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. நிலத்தின் விலை வரவர உயர்ந்து வருகிறது. அவ்வளவு விலை கொடுத்து இடம் வாங்கி வீடு கட்டக்கூடிய வசதி, பல எளிய, நடுத்தர குடும்பத்துக்கும் கிடையாது. ஆகவே அவர்களுக்கு நிலத்தை வீடு கட்ட இலவசமாகக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். அப்படிச் செய்தால் பலர் தாங்களாகவே தங்களுக்கான வீடுகளைக்கட்டிக் கொள்ள முன்வரவும் இந்தப் பிரச்சினை ஓரளவு தீரவும் உதவியாக இருக்கும்.

குடியேற்றத் திட்டங்களில் சமம் செய்ய சிலருக்கு இலவசமாக நிலமும் பணமும் அரசாங்கம் கொடுக்கும்போது, குடியிருப்பு வீட்டுக்கு நிலத்தை இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டியதும், முக்கியமாகும். செல்வந்தர்கள் தான் இடம் வாங்கி வீடு கட்டவும் முடியக்கூடியதாக இருக்கிறது. இந்த வசதி மற்றவர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதவசியம். தரிசாகக் கிடக்கும் இடங்களை. வீடுகட்ட தானமாகக் கொடுப்பதில் அரசாங்கத்துக்கு பணச்செலவு எதுவும் ஏற்படுவதற்கில்லை.

இதே சமயம் கொழும்பு முதலிய நகர்ப்புறங்களில் ஒரு சிலர் நூற்றுக் கணக்கான வீடுகளை சொந்தத்தில் வைத்துக்கொண்டு வாடகைக்கு வீட்டு, உழைப்பின்றியே அதிக வருமானம் பெறுகின்றனர். நியாயமான நஷ்டஈடு கொடுத்து அவ்வீடுகளை, அதில் குடியிருப்பவர்களுக்கே சொந்தாக்கக்கூடிய சட்டம் செய்ய வேண்டுமென்று வாடகை செலுத்துவோர் சங்கம் கேட்டுள்ள கோரிக்கை நியாயமானதே. சமதர்மக் கொள்கையைப்பின்பற்றி புதிய யுகத்தை ஆரம்பிக்கப் போவதாகக் கூறும் அரசாங்கம் இவ் விஷயத்தில் தாராள மனப்பான்மை காட்டி, முற்போக்கான சட்டதிட்டங்கள் செய்வதாயின் பல்லாயிரக்கணக்கான எளிய குடும்பங்களுக்கும் மறுமலர்ச்சி ஏற்பட்டு அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் வழிபிறக்கும்.

## உலக மேடை

## கென்னடியின் சமாதானச் சவால் ○ பொதுச் சபையில் சீனபிரதிநிதித்துவம் ○ காங்கோவும் உள்நாட்டுப் போரும்

— டி. எம். எம். —

சமாதானப்போருக்கு வருமாறு ஜான் எப். கென்னடி சவால்விட்டிருக்கிறார். ஐ. நா. சபையில் இரு தினங்களுக்கு முன் வெளியிட்ட முக்கிய கொள்கை அறிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி, ரஷ்யாவுக்கு இந்த அறை கூவலை விடுத்திருக்கிறார். பிரதமர் குருஷ்சேவ் இச்சவாலை ஏற்று கென்னடிக்குத் தக்கவிதத்தில் பதில் அளிப்பார் என நம்புகிறோம்.

ஜனாதிபதி கென்னடி அமெரிக்காவின் முக்கிய வெளிநாட்டுக் கொள்கை அறிக்கை ஒன்றை மிக அருமையான முறையில் வெளியிட்டார். ஆயுதப் பரிகரணம், அணு சோதனை, பெர்லின் விவகாரம், காலனி ஆதிக்கம் போன்ற பல்வேறு பிரச்சனைகளை பற்றிய யு. எஸ். கொள்கைகளைத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்.

அவரது அறிக்கையில் ஆயுதப் பரிகரணம் வெகு முக்கியமானது. ஆயுதப் பரிகரண விஷயத்தில் தான் சமாதானத்தின்சவால்தங்கியிருக்கின்றது. ஆயுதப் பரிகரணம் சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக்கள் ரஷ்ய அணுக் குண்டினால் சிதறிப்போனதல்லவா? அதை மீண்டும் ஆரம்பித்து ஆயுதப் பரிகரணம் சாத்தியமாகும் வரை நிரந்தரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டுமென ஜனாதிபதி கேட்டிருக்கிறார். தானும் ஒரு அணுக்குண்டுச் சோதனையை நடத்திவிட்டுத்தான் ஜனாதிபதி கென்னடி இவ் வேண்டுகோளை விடுத்திருக்கிறார். முதலில் அணு ஆயுதங்களைப் படிப்படியாக ஒழித்து விட வேண்டும் என்பதும், அதன் பின்பே இதர பயங்கர ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் என்பதும் அமெரிக்காவின் கட்சி. ஆனால் ஆயுதப் பரிகரணம் என்றால், அணு உட்பட சகல ஆயுதங்களையும் ஒழித்துப் படைக்குறைப்பை மேற்கொள்ள வேண்டுமென்பது ரஷ்யாவின் கட்சி. நாலைந்து வருடங்களில் அல்லது குறிப்பிட்ட ஒரு நிர்ணய காலத்திற்குள் பூரண ஆயுதப் பரிகரணம் ஏற்படுத்தப்பட வேண்டுமென ரஷ்யா ஒரு அறிக்கையை ஐ. நா. வுக்கும் அனுப்பிவைத்திருக்கிறது. உலகம் முழுதும் ஒரே சமயத்தில் கம்யூனிசப் புரட்சி ஏற்பட வேண்டுமென்ற டிராட்ஸ்கீய வாதத்திலிருந்து ஸ்டாலின்விலகி கெடுபிடிப்போரை அதிகரிப்பதின்மூலம்படிப்படியாகக் கம்யூனிஸ ஆதிக்கத்தைப் பரப்புவதில் வெற்றி கண்டார். ஸ்டாலினின் இந்த அடிப்படைக் கொள்கையை அப்படியே பின்பற்றி வரும் குருஷ்சேவ், ஆயுதப்பரிகரண விஷயத்தில் டிராட்ஸ்கியின் கம்யூனிஸ தத்துவத்தைப் போல் அனைத்தும் ஒரே சமயத்தில் ஒழிக்கப்பட வேண்டும் என விரும்புகிறார். எது எப்படியாயினும் தற்போதைய நிலையில் ஒரே சமயத்தில் பூரண ஆயுதப் பரிகரணம் சாத்தியமில்லை. படிப்படியாகவே அதைச் சாதிக்க முடியும். முதலில் அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் என்பதும் அணு சோதனைகளை மட்டும் ஒழித்தால் போதாது என்பதும் முக்கியமானது. இதற்கு ஜனாதிபதி கென்னடி கூறுவது போல் ஜெனிவா மகாநாட்டைத் தொடர்ந்து நடத்துவதைத் தவிர வேறுவழி கிடையாதென்றே சொல்லலாம். இதில் இரு வல்லரசுகளுக்குமிடையே நிலவும் மற்றொரு அபிப்பிராய பேதம் ஆயுதப் பரிகண கட்டுப்பாட்டுக் கமிஷன்—அல்லது மேற்பார்வைக் கமிஷன் ஒன்றை அமைப்பதால் அதில் எந்தெந்த நாடுகள் அங்கம் வகிக்க வேண்டுமென்பதாகும். கிழக்கு, மேற்கு நடுநிலைமை நாடுகள் இதில் அங்கம் வகிக்க வேண்டும் என்று ரஷ்யா சொல்கிறது. அவ்வாவது ரஷ்யாவின் யோசனைப்படி இந்தக் கமிஷனில் அதிகப்படியான அங்கத்தினர்கள் இருப்பார்கள். ஆயுத வல்லரசுகளை மட்டும் கொண்ட கமிஷனை, குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட ஒரு கமிஷனை இருந்தால் தான் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் இன்னும் சுலபமும் துரிதமும் இருக்கும் என்பது இந்தியா போன்ற நாடுகளின் கருத்து.

எது எவ்வாறிருப்பினும் ஆயுத பரிகாரணக் கமிஷன் ஒன்று ஏற்படுமானால் அதில் செஞ்சீனா அங்கம் வகிக்க வேணடுமென்பதை மறுக்க முடியாது. பீக்கிங்கின் ராணுவ பலம் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். எனவே இதைத் தவிர்க்க முடியாது. ஆயுத வல்லரசுகளைத் தவிர்த்து, வேறு நாடுகளைச் சேர்க்க வேண்டுமானால் ஒரு தார்மீகசக்தியாக இந்தியாவை மட்டும் சேர்த்துக் கொள்ளலாம். ஆயினும் இது காலத்திற்கு முற்பட்ட கருத்து. முதலில் ஆயுதப் பரிகாணத்தில் இரு வல்லரசுகளும் ஒரு வல்லரசுகளும் ஒரு உடன்பாட்டுக்குவந்த பிறகே, கட்டுப்பாட்டுக் கமிஷனைப் பற்றி யோசிக்க முடியும் எனவே இந்த விஷயத்தில் ஒரு உடன்பாட்டுக்கு வல்லரசுகள் வரவேண்டுமென்பதே உலகின் இன்றைய ஆவலாகும்.

### மற்றோர் அம்சம்

ஜனாதிபதி கென்னடியின் அறிக்கையில் உற்சாகமூட்டக் கூடிய மற்றோர் அம்சம் காலனி ஆதிக்கம் ஒழியவேண்டும் என்பதும், சகல குடியேற்ற நாடுகளும் சுதந்திரம் அடையவேண்டும் என்பதுமாகும். பிரான்ஸ், ஹாலந்து, போர்த்துக்கல் போன்ற காலனி ஏகாதிபத்தியங்களுக்கு பிடிக்காத போதிலும் உலகசபையின் முன் இவ் விஷயத்தில் அமெரிக்காவின் தார்மீக ஆதரவை தெளிவாக்கியதற்காக திரு. கென்னடியைப் பாராட்டத்தான் வேண்டும். அவசியம் நேரிடின் நேட்டோவிலிருந்து இந்நாடுகளை அது வெளியேற்றவும் தயங்கக் கூடாது. அமெரிக்காவுக்கு இவ்வளவு தைரியம் இருக்கிறதா என்பதே கேள்வி.

⁂ ⁂ ⁂

பெர்லின் பிரச்சினையில் பயமுறுத்தலுக்குஅமெரிக்கா பணியாதென்றும், அவசியமானால் அணுக்குண்டுகளை அங்கு வீச அது தயங்காதென்றும் கென்னடியின் அறிக்கை உணர்த்துகிறது. "ஐயோ, ஜெர்மனியே! உன்கதி இப்படியா ஆகவேண்டும். இரண்டு மகாயுத்தங்களினால் சின்னபின்னமாகிய ஜெர்மனியே, மீண்டும் உன்மக்கள் மீது அணுக்குண்டுவிழவேண்டுமென்பதுதான் தலையெழுத்தோ" என்று கேட்கத் தூண்டுகிறது.

### சீனப் பிரதிநிதித்துவம்

65 கோடி மக்களைக்கொண்ட சீனா, ஐ. நா. வில் இன்னும் அங்கம் பெறாதது நகைப்புக்கிடமான ஒரு கேலிக்கூத்து. சில லட்சம் மக்களைக்கொண்ட சிறிய நாடுகள் எல்லாம் அங்கம் வகிக்கும் ஐ. நா. வில் சீனாவுக்கு வழிமறிக்கும் அமெரிக்காவின் அர்த்தமற்றகொள்கை நடைமுறைக்கொவ்வாதது. சின்னஞ்சிறு போர்மோஸாவை சீனா என்ற பெயரால் ஐ. நா. வில் வைத்திருப்பது மட்டுமன்றி, பாதுகாப்பு சபையிலும் அது நிரந்தர அங்கத்தினராக சர்வ வல்லமை பொருந்திய (வீட்டோ) ரத்து அதிகாரத்துடன் விளங்குவதற்கு என்ன காரணம்? வல்லரசுகளின் கெடுபிடிதான். நடைமுறையில் சீனாவுக்கு ஸ்தானம் கிடைப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. போர்மோஷாவின் மீது சீனா பாத்தியதை கொண்டாடுவதும், போர்மோஸாவுக்கும், அமெரிக்காவுக்கும் பந்தோபஸ்து சபையில் ரத்து அதிகாரம் இருப்பதுமே இதற்கு முக்கிய காரணம் எனலாம். ஒருவேளை போர்மோஷாவை ஒரு தனி சதந்தரநாடாக அங்கீகரிக்க சீனா முன்வந்தால், அமெரிக்கா தன் ரத்து அதிகாரத்தை சீனப்பிரதிநிதித்துவத்தில் உபயோகிக்காமல் இருக்குமோ என்னவோ? அப்படியே இருந்தாலும் போர்மோஸா, கட்டாயம் "வீட்டோ"வை உபயோகிக்காமல் விடாது.

அமெரிக்கா தன் செல்வாக்கைப் பிரயோகித்து போர்மோஸாவை ரத்து அதிகாரத்தை உபயோகிக்கவிடாமல் செய்தாலும் கூட, பீகிங் அதை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்குமா என்பதே கேள்வி.

ஸ்டீரியரிங்கமிட்டி, சீனப்பிரதிநிதித்துவத்தை பொதுச் சபையில் விவாதிக்க அங்கீகாரமளித்தது ஒருபடி முன்னேற்றத்தைக் கொடுத்திருக்கிறது. முதன்முதல் சீனப் பிரதிநிதித்துவத்தை இந்தியா தான், இக்கமிட்டியில் கொண்டுவந்து பல வருடங்களாகப் போராடிவருகிறது ஆயினும் பொதுச் சபைக்கு விஷயத்தை அனுப்பாமலே கமிட்டி ஒவ்வொரு முறையும் சீனாவைத் தள்ளிவிட்டது. எனவே இம்முறை பொதுச் சபைக்கு விஷயம் வந்திருப்பதால் அதை ஒருபடி முன்னேற்றம் என்று தைரியமாகச்சொல்லலாம்.

பொதுச்சபை, சீனா விஷயமாக பூரண விவாதம் நடத்துமென்பதில் சந்தேகமில்லை. சீனாவில் துன்புறுத்தப்பட்டாலும், இவ்விஷயத்தில் வழக்கம்போல் தலைமை வகித்து சீனப் பிரதிநிதித்துவத்துக்கு இந்தியா போராடும்என்பதில் சந்தேகமில்லை. மேலும் பொதுச்சபை பெரும்பான்மை வாக்குகளால் சீனப்பிரதிநிதித்துவத்தை அங்கீகரித்தாலும் கூட தேவையான வாக்குகள் கிடைக்கும்வரை உள்ளே வராது. இவ்விஷயத்தில் அமெரிக்கா உண்மையை உணர்ந்து தனது ஊனக்கண்களைத் திறக்குமானால் வரவேற்கத்தக்கதாயிருக்கும். சுதந்திர நாடுகளின் எல்லைகளைச் சீனா அத்துமீறி ஆக்கிரமித்திருப்பதாயும் ஆக்கிரமிப்பு நோக்கங்களுடன் பலநாடுகளைப் பயமுறுத்தி வருவதாயும் பலநாடுகள் பொதுச்சபையில் கண்டனம்செய்யும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் ஐ. நா. வுக்குள் சீனாவைக் கொண்டுவருவதின் மூலமே

5ம்( பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

விஸாவரி காரணமாக மூன்று வேதாரண்ய குருக்கள்மார்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்களாம். 400 ரூபாய் கட்டுவதென்பது முடியாத காரியமென்றும் அவர்களுக்கு வருமானம் மிகவும் சொற்பம் என்றும் கொத்தலாவலை பிரதமராக இருந்த காலத்தில் 27 குருமார்களுக்கு விஸா கிடைத்ததாயும், அதிக வரி விதிப்பது, படிப்படியாக அவர்கள் அனைவரையும் வெளியேற்றுவதாக முடியுமென்றும் ஒரு சைவ அன்பர் நேற்றுக் காலை தெரிவித்தார்.

இங்கேயே குருமார் பயிற்சி அளித்து சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியாதா? என்று கேட்டேன்.

உடன் அவர், பரம்பரையாக வரும் வழக்கமென்றும், இதை மாற்றுவது கேலிக்கூத்தாகலாமென்றும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள இந்த ஆன்மீகத் தொடர்பு மிக மிக முக்கியமானதென்றும் உணர்ச்சியுடன் கூறினர்.

* * *

சிதம்பரத்திலே யாழ்ப்பாணத்தவர் மடங்கள் 11 இருக்கின்றனவாம். அவற்றுக்கு இங்கு சொத்துக்கள் இருப்பதாயும், வருடத்தில் சுமார் மூவாயிரம் ரூபாய்க்குமேல் இந்த தர்மத்துக்குச் சேர வேண்டுமென்றும் செலாவணி காரணமாக இது தடைப்பட்டு சிதம்பரத்தில் இந்தத் தர்மமும் பாதிக்கப்படுவதாயும் அதே அன்பர் சொன்னர்.

இலங்கையிலுள்ள பௌத்தர்களுக்கு புத்தகயா எப்படியோ, அப்படியே ஈழத்திலுள்ள சைவர்களுக்கு சிதம்பரமுமாகும். கோவில் என்றால் சிதம்பரம்தான். எக்காரணம் பற்றியும் இந்த ஆத்மீகத் தொடர்புகளை வெட்டிவிடக் கூடாதென்றும், சைவசமயத்துக்கு இது உயிர்போன்றதென்றும் சொன்னர் அதே அன்பர்.

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா அஞ்சல் விஷயமாக சமசமாஜ எம். பி.க்களும்கூட போராடி வெற்றிகண்டனர்.

விஸாவரிகாரணமாக, இங்கு திருக்கேதீச்சரம் உள்ளிட்டு பல கோவிலில் திருப்பணிகள் தடைப்பட்டுள்ளன. சமய சம்பந்தமாக இவ்வித முக்கிய விஷயங்களிலே இச்சட்ட கெடுபிடிகளைத் தளர்த்த, சமசமாஜ் உள்ளிட்டு நியாயபுத்தியுள்ள பல எம். பி.க்களிடமும் தெரிவித்தால் அவர்கள் அரசாங்கத்துடன் வாதாடி, ஆவன செய்வார்களென்றே நம்புகிறேன். வானொலி அஞ்சல் அவசியமே. அதைவிட முக்கியமானவை மேற்குறித்த விஷயங்கள்.

* * *

பர்மாவிலே பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்கிவிட்டனர். மற்ற சிறுபான்மை மதங்களுக்கு பூரண உரிமையும் பாதுகாப்பும் அளிக்கும் மசோதா பார்லிமெண்டில் விவாதத்துக்கு வந்தபோது இரு சபைத் தலைவர்களும், மந்திரிகளில் சிலரும் வெளியில் செல்லப் பயந்து சபையிலேயே இரவில் தூங்கினராம். 300 புத்த பிக்குகள் பார்லிமெண்டை சூழ்ந்து எதிர்ப்புக் கிளர்ச்சி செய்ததாகவும், ஒரு மெம்பரிடம் மசோதாவை எதிர்ப்பதாக கட்டாயக் கையெழுத்து வாங்கியதாயும் சுமார் 2000 போலிசார் ஆயுதபாணிகளாக பார்லிமெண்டைச் சுற்றி காவல்புரிந்ததாயும் கலகம் ஏற்படுமென்று பயந்து பள்ளிக்கூடங்களும் கடைகளும் மூடப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

முடிவில் மசோதா நிறைவேற்றப்பட்டதாம்.

ஆனால் இத்துடன் கிளர்ச்சி நிற்குமா என்பது நிச்சயமில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகம் இதுதானா?

## நாட்டு நிலைமை பற்றி டட்லி

பதுளை, புதன்

"இலங்கையை ஜனநாயக நாடென்று கூறமுடியாது, மக்களாட்சிக்கு அங்கு இடமேயில்லை. இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்போல இந்த நாட்டில் ஒருகாலத்திலும் பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை."

பதுளை சேனநாயக்கா பூங்காவில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பேசுகையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா இவ்வாறு கூறினார். திரு. சேனநாயக்கா மேலும் கூறியதாவது:

"அவசரகால சட்டத்தை நீடிக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை. மக்களாட்சி என்பதும் ஜனநாயகம் என்பதும் இதுதானா? மக்களைப் பாதுகாப்பதற்கன்றி அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களைப் பாதுகாப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது. தேர்வுகாலங்களில் மக்களுக்கு அவர்கள் அளித்த உறுதிமொழிகளிலிருந்து தவறிச் செல்லும் அரசாங்க எம். பி. க்களின் செல்வாக்கு, மக்களிடையே குறைந்துவருவதால் தம்மைப் பாதுகாப்பதன் பொருட்டே அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்தார்கள்."

திரு. சேனநாயக்கா தொடர்ந்து பேசியதாவது:

"நாட்டின் இன்றைய நிலைமைக்குப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவை நான் எதுவித குறையும் கூறமாட்டேன். மறைவிலிருந்து அவரைப் பிழையான நெறியில் வழிப்படுத்தும் ஏனைய அரசியல்வாதிகளையே நான் குறைகூறுவேன். இவர்களாலேயே நாடு மோசமான நிலையை அடைகின்றது. எஸ். எல். எப். பி. கட்சியினர் பலர் யு. என். பி. இறந்தேபோய்விட்டது. திரும்பவும் அது ஆதிக்கத்துக்கு வரப்போவதில்லை எனக் கூறினர்கள். ஆனல் அப்படிக் கூறியவர்கள் யு. என். பி. க்கு இன்று அஞ்சுகிறார்கள். மதிப்போடும் தகுதியுடனும் ஜனநாயக முறையில் நாட்டை ஆளக்கூடிய கட்சி யு. என். பி. ஒன்றேயாகும்.

பார்லிமெண்ட் கூட்டத்துக்குச் சமூகமளிக்காது செனட்டிலிருந்து பிரதமர் பதிலளித்த சம்பவம் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் நடைபெறவில்லை. வரவுசெலவுத்திட்ட மசோதா நிறைவேறுமுன்னரே நிதிமந்திரி ஒருவர் பார்லிமெண்ட் சபையை விட்டு வெளியேறியதும் இந்த நாட்டிலேதான் நடைபெற்றிருக்கிறது. திரு டட்லி மேலும் கூறியதாவது:

"ஜனநாயக ஆட்சிமுறையை மறந்து அவசரகாலச் சட்டத்துடன் பிரதமர் ஒரு சர்வாதிகாரியாக நடந்துவருகிறார் என மகியங்கனை எம். பி. திரு. சி. ஜே. செனிவரத்ன ஒருமுறை கூறியுள்ளார். ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தாமல் 25 வருடகாலமாகக் கஷ்டப்பட்டு திரு. டி. எஸ். சேனநாயக்கா பெற்றுக்கொண்ட சுதந்திரம், இன்றைய அரசாங்கத்தின் கையில் சிக்கித் தவிக்கிறதென வெலிகம எம். பி. திரு. மொன்ராக் ஜெயவிக்கிரமா ஒருகுறை கூறியுள்ளார்." எஸ். எல். எப். பி. ஆட்சிக்கு வந்தகாலம்தொட்டுப் பிரச்சினைகள் அதிகரித்து வருகிறதென்றும் திரு. டட்லி தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

# சேவை செய்யப்பிறந்த இராஜதந்திரி பண்டாரநாயக்கா

## மந்திரி புகழ்மாலை

கொழும்பு, புதன்

'காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா மக்களுக்கு சேவை செய்வதற்கெனப் பிறந்த ஒரு சிறந்த இராஜதந்திரி. அவர் மக்களுக்காக தமது வாழ்வைத் தியாகம் செய்தார்' என போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல கூறினர்.

மந்திரி மேலும் கூறியதாவது:-

"உயர்ந்த குடும்பத்தில் பிறந்த திரு. பண்டாரநாயக்கா ஒரு இளவரசனைப்போல், சகல வசதிகளுடனும் வாழ்ந்திருக்கலாம். ஆனல் கஷ்டப்படும் மக்களுக்காக தமது சுகவாழ்வைத்துறந்தார்.

காலஞ் சென்ற பிரதமர் இறுதியாகக் கூறியவார்த்தைகளை எல்லோரும் நினைவிலிருத்த வேண்டும். அவர் சத்திரசிகிச்சைக்காக படுக்கையில் கிடந்தபோது பௌத்த பிக்குவின் உடை அணிந்திருந்த அந்தக் கொலைகாரர்மீது பழிவாங்கவேண்டாமெனக் கூறினர்.

இங்கு கூடியிருக்கும் பெருந்திரளான மக்கள் கூட்டத்தைக் கொண்டு, காலம் சென்ற பிரதமரை மக்கள் மறந்துவிடவில்லை என்பதை நன்கு அறியக்கூடியதாய் இருக்கிறது.

சிங்களத்தை அரசகருமமொழியாக்குவதும் விமான கடற்படைத் தளங்களை நமதாக்குவதும் பஸ் சேவையை தேசியமயமாக்குவதும் தொழிலாளர்களுக்கு உரிய இடமளிப்பதுவும் வறுமையில் உழல்பவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதும் குற்றமா?

சமாதியிலுள்ள ஐந்து தூண்களும் காலஞ்சென்ற பிரதமர் அரசியலில் பின்பற்றிவந்த ஐந்து கொள்கைகளைக் குறிப்பனவாகும். இச்சமாதியைக் கடந்து மோட்டார் வாகனங்கள் செல்லும்போது அமைதியாகச் செல்ல வேண்டுமென்ற அறிவித்தல் பலகை ஒன்றை இவ்விடத்தில் அமைக்க நான் ஏற்பாடு செய்வேன். நாட்டிலுள்ள சகல மக்களும் இவ்விடத்தாற் செல்லும்போது அமைதியாகச் செல்ல வேண்டுமென்பது எல்லோருடைய விருப்பமுமாகும்."

# பிரிட்டிஷ் ஹைகமிஷனர்

## நேருவை சந்தித்தார்

புதுடில்லி, செப். 27

கடாங்கா பற்றிய பிரிட்டிஷ் கொள்கையை இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சேர் போல்கோர்-பூத் நேற்று இந்தியப் பிரதமர் திரு. நேருவைச் சந்தித்து எடுத்துக் கூறினர்.

தமது சொந்த வேண்டுகோளின்மீது பிரதமர் நேருவைச் சந்தித்த பிரிட்டிஷ் ஹைகமிஷனர் 30 நிமிஷ நேரம் பிரதமருடன் பேசிக் கொண்டிருந்தார்.

கடாங்கா தனியாகப் பிரிந்திருப்பதை பிரிட்டன் ஆதரிக்கவில்லையென்றும் கடாங்கா காங்கோவுடன் இணைந்து கொள்வதையே பிரிட்டன் விரும்புகிறதென்றும் ஹைகமிஷனர் விளக்கியதாகத் தெரிகிறது.

# சோஷலிசம் எது? கெனமன் விளக்கம்

பதுளை, புதன்

"சோஷலிசத்தில் இரண்டு வகைகள் உள. ஒன்று இலங்கையில் பின்பற்றப்பட்டுவரும் சோஷலிஸம். அதற்குப் பெயர் 'டொம்பே' சோஷலிஸம். மற்றையது முன்னேற்ற நாடுகளாகிய ரஷ்யா, சீனு பல்கேரியா, போலந்து ஆகிய நாடுகளில் பின்பற்றப்பட்டு வரும் சோஷலிஸம்."

இவ்வாறு பதுளை தர்மதுத்தக்கல்லூரி மண்டபத்தில் 'சோஷலிஸம்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. பீட்டர் கெனமன் கூறினர்

திரு. கெனமன் மேலும் பேசியதாவது:

'டொம்பே' சோஷலிஸம் வாழ்க்கைச் செலவை அதிகரித்துள்ளது. நிதிமந்திரி பிழையான பாதையில் செல்வதால் நாட்டிலுள்ள பிரச்சினைகள் யாவும் தீர்க்கபடாதிருக்கின்றன. இலங்கை சோஷலிஸ அரசாங்கமொன்றை இன்னும் பெறவில்லை. அரசியல் சுதந்திரம் மட்டும்தான் இலங்கைக்குக் கிடைத்திருக்கின்றது. உண்மையான சோஸலிஸத்தை ஏழைகளையும் தொழிலாளர்களையும் கொண்ட ஒரு அரசாங்கமே பெற்றுக் கொள்ள முடியும்.

ஏழை வியாபாரிகளின் வயிற்றில் அடிப்பதுதான் தேசியமயமாகாது. இலங்கையில் உள்ள ஒருசிலருக்குத் தேசியமயமென்பது ஒரு கேலிக் கூத்தாக இருக்கிறது. துறைமுகம் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இது வெற்றிகரமான விளைவுகளைத் தந்துள்ளது. இ. போ. ச.வின் தேசியமயம் நாட்டுக்கு நஷ்டம் விளைவித்துள்ளமைக்கு இ. போ. ச. முழுவதும் தேசியமயமாக்கப்படாததே காரணமாகும்.

பத்திரிகைகள் தேசியமயமாக்கப்படல் வேண்டும் என்று கோரப்பட்டுவந்தது. ஆனல் இது செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆகிவிட்டது. ஏனெனில் உள்நாட்டு பத்திரிகளில் பண முதலாளிகளின் செல்வாக்கு இனனும் இருந்து வருகிறது."

# உலகமேடை

(4ம் பக்கத்தொடர்ச்சி)

ஐ. நா. சாஸனத்தைப் பின்பற்றுமாறு அந்நாட்டை வற்புறுத்தமுடியும் என்பதும் சந்தேகமில்லை.

**காங்கோ நிலைமை**

"வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறியது" என்பார்கள். அதேபோல்தான் காங்கோ நிலைமை இருக்கிறது. கடாங்காவில் ஐ. நா. பலமாக ஊன்றியிருந்த போதிலும், ஷோம்பேயின் போக்கை மாற்றமுடியவில்லை. ஐ. நா. வுக்கும் ஷோம்பேக்கும் ஏற்பட்ட யுத்த நிறுத்தம் காங்கோ மத்திய அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை. எனவே, ஜெனரல் மொபுட்டுவின் மத்திய அரசாங்கத் துருப்புக்கள் எலிஸபெத்வில்லிக்குச் சென்று கொண்டிருக்கின்றன. ஸ்டான்லிவில்லியில் பார்லிமெண்ட் இரகசியமாகக்கூடி, கடாங்காவை இணைக்கும் முயற்சியில் பிரதமர் அடோலாவுக்குச சர்வாதிகாரம் வழங்கியதைத் தொடர்ந்து புதிய நிலை ஏற்பற்டிருக்கிறது. இதன் மூலம அங்கு ஓர் உள்நாட்டுப்போர் ஏற்படும்போல் தெரிகிறது. உள்நாட்டுப்போரைத் தடுக்க ஐ. நா. எடுத்த முயற்சி விழலுக்கு இறைத்த நீரைப்போல் ஆகிவிடுமெனத் தெரிகிறது. கடாங்காவில் ஐ. நா. படைபலம் அதிகரிக்கப்படுவதின் மூலமே இந்த நிலைமையைத் தடுக்கமுடியும். ஹமர்ஷீல்ட் மரணத்தால் ஏற்பட்ட தலையிடியுடன், புதிய நிலைமையும் சேர்ந்து, ஐ. நா. இருபுறங்களிலும் அடிபடும் மத்தளத்தைப்போல் ஆகியிருக்கிறது. ஆயினும் அதன் தோல் கிழிந்துவிடாமல் இருக்கவேண்டும்.

# கள்ளுக்கும் ஒரு கார்ப்பரேஷன்!

## சுதந்திரக் கட்சிக்கிளை சிபார்சு

வத்தளை, புதன்

அரசாங்கம் ஒரு கள்ளுக் கார்ப்பரேஷனை ஸ்தாபித்து, அதன் ஏகபோக விநியோக உரிமையை அது வைத்துக் கொள்ளலாம். இதனல் கள் இறக்குபவர்களுக்கு நீதி வழங்கவும், வாடிக்கைகாரர்களுக்குத் திருப்தி அளிக்கவும் வாய்ப்பு ஏற்படுமென்ற தீர்மானம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஹெந்தலை-ஹிகிற்ற-வத்தளைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இத்தீர்மானத்தைக் கொண்டு வந்த சுதந்திரக் கட்சிக் கிளையின் பொதுக் காரியதரிசி திரு. ஏ. டி. எஸ். சோமபாலா பேசுகையில், இப்பொழுது கள்ளு விநியோகப் பொறுப்பு, சில முதலாளிமாரிடமே இருக்கிறது என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: "இந்த முதலாளிமார்கள் இவ்விநியோகத்தினல் அதிக லாபம் அடைகின்றார்கள். இதனல் அவர்கள் மட்டும் பயனடைந்து முன்னேற்றமான திட்டங்களுக்கு முட்டுக்கட்டையும் போடுகின்றார்கள். அதிகமான வாடகைக்காரர்கள், தங்களது லாபத்தை முதலாளித்துவ வகுப்பினரின் நலனுக்காக உபயோகித்து வருகின்றனர்.

திரு. பிரான்சிஸ் பெரேரா பேசுகையில், இலங்கையிலுள்ள முதலாளி வர்க்கத்துக்கு இறுதிக் காலம் வந்துவிட்டதென்றும், கள்ளுக் கார்ப்பரேஷன் ஸ்தாபனத்தினல் முதலாளி வர்க்கம் மறைந்துவிடும் என்றும் கூறினர்.

# மார்ட்டின் வீதி இரட்டைக் கொலை வழக்கு

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

மார்ட்டின் வீதியைச் சேர்ந்த செல்வம் மரியதாஸ், அருளானந்தம் துரைராஜா ஆகிய இரு சகோதரர்களையும் கடந்த 15-ந் திகதி குத்திக் கொலை செய்ததாக சின்னத்துரை குலரத்தினம் என்கிற 'சிம்பிளி' என்பவர்மீது குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரத்தினல் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் முக்கிய சாட்சி சுகவீனம் காரணமாக கோர்ட்டில் பிரசன்னமாகயிருக்காததால் மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை அடுத்த மாதம் 3-ந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

அரசாங்க தரப்பில் இன்ஸ்பெக்டர் எம். வல்லிபுரத்துடன் திரு. ஜிம்மி ராஜரத்தினம் ஆஜரானர். எதிரி தரப்பில் திரு. ஆர். விசுவநாதனின் உதவியுடன் சாம் டி. சபாபதி ஆஜராயிருந்தார்.

# ஐ. நா. சபைத் தலைவர் ஸ்டாக்ஹோம் செல்கிறர்

நியூயோர்க், செப். 27

விமானத்தில் உயிர்நீத்த ஐ. நா. தலைமைக் காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஐ. நா. பொதுச்சபைத் தலைவர் திரு. மொங்குஸ்லிம் நாளை நியுயார்க்கிலிருந்து சுவீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமுக்கு புறப்பட்டுச் செல்கிறர்.

வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் இறுதிச் சடங்கில் இந்திய அரசாங்கத்தின் சார்பில் முன்பு ஐ. நா. மகா சபைத்தலைவராகவிருந்த திருமதி விஜயலட்சுமி பண்டிட் கலந்து கொள்வார்.

# நாட்டுக்கு உதவும் கல்வி

## உதவி மந்திரி கருத்து

பலாங்கொடை, புதன்

"பள்ளிக்கூடங்களைத் தரப்படுத்திய பின் கல்விக் கமிஷன் தனது அறிக்கையை வெளியிட்டதும் தேசியக்கல்விமுறை அமுலுக்குக் கொண்டு வரப்படும்" இவ்வாறு உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்ன வெலிகப்போலா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பள்ளிக்கூடங்களின் கூட்டு மகாநாடு ஒன்றில் பேசுகையில் கூறினர். வெலிகபோலா, உராவெலா, யட்டிபஸ்கமுவா, ஹட்டாங்கலை, கொன்கஸ்தென, பலாங்கொடை ஆகிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்கள் மகாநாட்டில் கலந்து கொண்டன. திரு. கருணரத்ன மேலும் கூறியதாவது:

"நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் உதவக்கூடிய முறையான கல்வியே எமக்குத் தேவை. தமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஏற்ற கல்வி பயின்றுவந்தமையாலேயே பிறதேசங்கள் கல்வித்துறையில் மிகுந்த வெற்றியீட்டியுள்ளன. இவ்வருடம் 3,000 ஆசிரியர்களைக் கொண்ட 800 பள்ளிக்கூடங்களை, அரசாங்கம் தனது சொத்தாக்கியதோடு ஆசிரியர்களுக்கு வேலையும் வழங்கியுள்ளது"

திரு எச். டி. விகுணதிலகா, திரு. என். எவ். குணசேகரா, திரு. எச். எம். வீரசேகரா திரு. பி. எஸ். குருகே ஆகியோரும் பேசினர்.

# மனித உரிமைகளை மதிக்கின்றேம்

## — அமெரிக்க ஸ்தானிகர்

கொழும்பு, புதன்

"எமது இருதேசத்தினரதும் அடிப்படைக் கொள்கைகளில் வித்தியாசம் எதுவுமில்லை, இலங்கையரும் அமெரிக்கரும் ஆகியநாம் மனித சமுதாயத்தின் அந்தஸ்துக்களுக்கும் தனி மனிதனின் உரிமைகளுக்கும் பெருமதிப்புக் கொடுத்துவருகின்றேம். தேசங்கள் சுதந்திரமாக இருப்பதையும் இருதேசத்தினரும் பெரிதும் விரும்புவார்கள்" வட்டுவையிலுள்ள பிரவசன்ஞேதய ஞாயிறு பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பேசும்போது அமெரிக்க ஸ்தானிகர், செல்வி பிரான்சிஸ் வில்லிஸ், மேற்கண்டவாறு கூறினர்.

பிரவசன்ஞேதய தாயக்க சபைத் தலைவர் திரு. ஏ. சி. குணரத்ன பேசுகையில் இலங்கைக்கு அமெரிக்கா செய்த உதவிகளைப் பாராட்டினர்.

# வரிகளால் துயருறும் மக்கள்

கட்டுநாயக்கா, புதன்

அண்மையில் கட்டுநாயக்காவில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், நான்குவித வரித்திட்டத்தை முதலியார் டபிள்யு. எம். முனசிங்கி வன்மையாகக் கண்டித்தார்.

முதலியார் முனசிங்கி தமது உரையில் குறிப்பிட்டதாவது: "இந்த நாட்டிலுள்ள மக்கள், நீதியற்ற வரிகளால் அல்லற்படுகின்றனர். அரசாங்கத்துக்கு நான் இதுவரை வரிப்பணமாக சுமார் 7 லட்சத்துக்கதிகமாக செலுத்தியுள்ளேன். இவற்றுடன் இன்னுமதிகமாக மக்களிடம் பறிப்பது ஓர் நேர்மையற்ற செயலாகும்.

# ஜயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் உள்ளிட்டு பல மந்திரிகள், மெம்பர்கள் இவர்களுக்கு விசேஷ பாதுகாப்பு தொடர்ந்து அளிக்கவேண்டுமென்று, இலங்கையின் அனுபவத்தைக் கொண்டு எச்சரிக்க விரும்புகிறேன்.

## கோவாவிடுதலைக்கு இராணுவநடவடிக்கை

### தேசியகமிட்டி கோரிக்கை

பம்பாய், செப். 27

இந்தியாவில் போர்ச்சுகலின் ஆதிக்கத்திலுள்ள கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகளை விடுதலை செய்வதற்கு இந்திய அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோவா தேசீய விடுதலைக் கமிட்டி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

கோவா சம்பந்தமாக பிரதம மந்திரியும் மற்றும் மந்திரிகளும் சமீபத்தில் தெரிவித்த கருத்துக்களை கமிட்டி வரவேற்றதுடன் கோவா சம்பந்தமாக மத்திய அரசாங்கக் கொள்கையில் நல்ல மாறுதல் ஏற்பட்டுள்ளதை இது குறிக்கிறதென்றும் தெரிவித்தது.

## இலட்சுமித் தோட்டவிசாரணை

### குறுக்குவிசாரணை நீடிக்கிறது

கொழும்பு, புதன்

இலட்சுமித் தோட்ட விவகாரம் சம்பந்தமாக விசாரணைசெய்து வரும் விசாரணைக் கமிஷன்முன் இலட்சுமித் தோட்டத்துரை திரு. ஹார்வியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்து வருகிறார்.

குறுக்கு விசாரணை இன்னும் இரகசியமாகவே நடைபெற்று வருகிறது.

இவ் வாரம் புதன் கிழமையும், வியாழக்கிழமையும் தான் விசாரணை நடைபெறுமென்று கமிஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். திரு. ஹார்வியின் குறுக்கு விசாரணை அப்பொழுது முடிவடையுமெனச் நிச்சயமாகச் சொல்ல முடியாதிருப்பதாக அவர் கூறினார்.

## பூதவுடல் சுவீடன் செல்கிறது

லியப்போல்ட்வில்லி, செப். 27

விமானவிபத்தில் உயிர்நீத்த ஐ. நா. பொதுச் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டினதும் மற்றவர்களுடைய சடலங்களும் நேற்று லியப்போல்ட்வில்லிக்கும் சாலிஸ் பெரிக்கும் எடுத்துச் செல்லப்பட்டன.

திரு. ஹமர்ஷீல்டின் பூதவுடல் நேற்றிரவு லியப்போல்ட்வில்லியில் மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது.

திரு. ஹமர்ஷீல்டின் பூதவுடல் இப்பொழுது அவரது தாயகமான சுவீடனுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இம் மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை ராஜாங்க மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

---

திரு. ஹார்வி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முடிந்ததும் மற்றும் பலர் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள்.


குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார்

மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,

குருநெனியா.



ஒருபோதும் கிடைக்காத

மிகச் சிக்கனமான

பொஸ்

BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்



சமையல் அடுப்பு - 20U —2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற இடமும் இருண்டு. போர்ஸலேன் மேற்புறம். இரேட்ஸ் மற்றும் டிரம் புகைபோக்கிகள். கால 2 கலன், இளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு - 27U —2 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், இரேட்ஸ் மற்றும் டிரம் புகைபோக்கிகள். 2 காலன். இளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு - 37U —3பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், இரேட்ஸ் மற்றும் டிரம் புகைபோக்கிகள். 2 காலன் இளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு CWE ஸி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், ஸி.டப்ளியூ.ஈ. கடை, மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்.

H. W. 46


# முடிக்குரிய காணிகளையே முதலில்தேர்ந்தெடுக்கவும்

## வித்தியாதிபதி அறிக்கை

கொழும்பு, புதன்

பொருத்தமான முடிக்குரிய காணிகள் இல்லாது போனாலன்றி தனிப்பட்டோரின் காணிகளைப் பெற்று அவற்றில் புதிய கட்டடங்கள் நிறுவவோ இருக்கும் கட்டடங்களை விஸ்தரிக்கவோ கூடாது என வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி. சில்வா உதவி வித்தியாதிபதிகளுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

நல்ல பயிர்ச் செய்கை செய்யும் நிலம், கோவிலுக்கோ தேவாலயத்துக்கோ சொந்தமான நிலம், தாம் இருக்கும் நிலத்திலிருந்து வருவாய் பெறும் ஏழைகளுக்குச் சொந்தமான நிலம் மயானமாகப் பாவிக்கப்படும் நிலம், மில்லோ அல்லது வருவாய் தரக்கூடிய எத்தொழிலோ இயங்கிவரும் நிலம் இவ்வித தனிப்பட்டவர்களின் நிலத்தை புதிய பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கக் கூடாது என கல்வி வித்தியாதிபதி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் அறிவித்துள்ளதாவது:-

அதிக நிலம் வைத்திருக்கும் செல்வந்தர்களின் நிலம் இருக்குமானால் சிறுபகுதி நிலத்தை வைத்திருப்பவர்களிடமிருந்து நிலம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும்.

---

மத்திய கல்லூரிக்கு ஆகக் கூடியளவு 10 ஏக்கர் காணியே ஒதுக்கப்பட்டவேண்டும். சிரேஷ்ட பள்ளிக்கூடங்களுக்கு மூன்றிலிருந்து ஆறு ஏக்கர் வரையும் மற்றப்பள்ளிக்கூடங்களுக்கு இரண்டிலிருந்து ஐந்து ஏக்கர் வரையும்தான் துக்கப்படவேண்டும்.

---

உதைபந்தாட்டம்

## இராணுவ கோஷ்டி தோல்வி

மன்னார், புதன்

தோட்டவெளியிலுள்ள இராணுவத்தைச் சேர்ந்த கோஷ்டிக்கும் மன்னார் அரசாங்க ஊழியர் சங்கக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இராணுவக் கோஷ்டி ஆறுகோல்களால் தோல்வி அடைந்தது.

மன்னார் கலால் இலாகா இன்ஸ்பெக்டர் திரு. ஜே. கே. மில்ஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

மன்னார் சென். சேவியர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியை பெருந் தொகையானோர் பார்த்தனர்.

---

## கல்லால் தாக்கி காயம் விளைவித்தாராம்

மாவிட்டபுரம், செவ்வாய்

தொல்புரத்தைச் சேரந்த மாரிமுத்து பொன்னையா என்பவரைக் கல்லால் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாகத் தொல்புரத்தைச் சேர்ந்த சின்னப்பொடியன் முருகேசு என்பவர்மேல் குற்றஞ்சாட்டி சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. குமாரினால் மல்லாகம் மஜிஸ்ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரியை 100 ரூபாய் அபராதம் செலுத்தும்படியும் இப்பணத்தை வழக்காளிக்குக் கொடுக்கும்படியும் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் கட்டளையிட்டார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**28-9-61 வியாழன்**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 கோட்டு வாத்தியம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரமானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்

இரவு 7-00 சிங்களம் மூலம் தமிழ் - 1, 7-15 நேயர் விருப்பம், 7-45 'பிறந்த நாள் பரிசு' - நாடகம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி பி.ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-15 பி. ஆர். எஸ். மணி - புல்லாங்குழல்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-45 ராகம், தானம், பல்லவி, எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதர் - வீணை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 ரேடியோ நாடக இசை, 9-30 அகில பாரத இன்றைய இலக்கிய நிகழ்ச்சி.

---

## எறி குண்டினால் படுகாயம் அடைந்தார்

கொழும்பு, செவ்வாய்

கொள்ளுப்பிட்டி பல்மேரா அவன்யூவில் தமது நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக அங்கு சென்ற வில்பேர்ட் என்பவர் மீது எறிகுண்டு ஒன்று வீசப்பட்டதால் அவர் படுகாயமுற்றார். அவரது முகத்தில் அரைவாசி சிதைந்து போய்விட்டது. வீட்டில் இருந்த அவரது நண்பரின் மனைவி வெடி குண்டுச் சத்தத்தினால் அதிர்ச்சியுற்றார். அவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன.

வெளியே நின்று விளையாடிக் கொண்டிருந்த ஐந்து பிள்ளைகளுக்கும் எதுவித தீங்கும் ஏற்படவில்லை.

குண்டுவீசப்பட்டசில நிமிடங்களில் கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயசேகரா அங்கு சென்று காயமடைந்த வில்பேர்டை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்.

சம்பவம் நிகழ்ந்த இடத்துக்குச் சமீபத்திலிருந்த வில்லி சில்வா என்பவர் தமக்கு ஒரு வெடிச் சத்தம் கேட்டதாகவும் வில்பேர்ட் நிலத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைத் தாம் கண்டதாகவும் பொலிஸ் அதிகாரியிடம் கூறினார். பொலிஸ் அதிகாரிகள் இச்சம்பவம்பற்றிப் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

லண்டன், செப். 26

திரு. ஹமர்ஷீல்டுடன்விமான விபத்தில் மரணமடைந்த 16 பேரின சடலங்கள், இன்று சாலிஸ்பரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவை, அவரவர் நாட்டுக்கு அனுப்பப்படும்.

## கூ. மொ. வி. ஸ்தாபன ஆலோசனைக் கமிட்டி

கொழும்பு, செவ்வாய்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் விவகாரங்கள் பற்றித் தமக்கு ஆலோசனை கூறுவதற்கென வர்த்தக உணவுக் கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னஒரு பார்லிமென்டரிக் கமிட்டியை நியமித்துள்ளார்,

கூட்டுறவு மொத்த விற்பனைஸ்தாபனத்தின் வியாபார விவகாரங்கள்பற்றியும் பொது நிர்வாகம் பற்றியும் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் சிலர் வர்த்தக உணவுக் கப்பல் மந்திரிக்குச் சில குறைகளை எடுத்துக் கூறியதன் பேரில் மந்திரி மேற்படி கமிட்டியை நியமிக்கத் தீர்மானித்துள்ளார். வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சு அதிகாரிகளும் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன அதிகாரிகளும் மேற்படி ஆலோசனைக் கமிட்டியில் அங்கத்துவம் பெறுவர் என அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. கமிட்டியில் கீழ்வருவோர் அங்கத்தவர்களாவர்: கல்வி மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணாரத்ன, களனித் தாகுதி எம். பி. திரு. ஆர். எஸ். பெரேராமகாரா எம்.பி திரு. கே. கே. சூரியாராச்சி, கலகெதர எம். பி. திரு. கே. அப்துல் ஜபார்.

## நஞ்சுண்டு பிக்கு மரணம்

குளியாப்பிட்டி, செவ்வாய்

தலகம்பிட்டியா பன்னலோக தேரோ என்பவர் நஞ்சுத்திராவகம் உட்கொண்டு மரணமானர்.

மரண விசாரணையின் போது பன்னலோகதேரோ எழுதிய கடிதம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. அக்கடிதத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கிராம மக்களின் தொல்லைகள் தாங்கமுடியாமல் நான் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து செல்கிறேன்."

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி, நஞ்சுத் தன்மையால் அவர் மரணமானர் எனத் தீர்ப்பளித்தார்.

## இதுவரை 8 இந்தியர் மாண்டனர்

புதுடில்லி, செப். 26

காங்கோவிலுள்ள ஐ நா. இந்திய வீரர்களில் இதுவரை 8 பேர் மாண்டதாயும், 14 பேர் காயமடைந்ததாயும், 39 பேர் லேசாகக் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

## அத்துமீறி பிரவேசித்தாராம்

புங்குடுதீவு, செவ்வாய்

புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நல்லையா என்பவர் இம் மாதம் 12-ம் திகதி அச்சுவேலியைச் சேர்ந்த பாலசிங்கம் பொன்னையா என்பவரின் வீட்டினுள் நடு இரவில் அத்துமீறிப் பிரவேசித்ததாக காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. துரைசிங்கத்தால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் வேலுப்பிள்ளை நல்லையாவை ரூ. 500 பிணையில் செல்லும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

## இ. போ. சபைக்கு கோரிக்கை

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவிலிருந்து தண்ணீரூற்றுக்கூடாக அநுராதபுரம் செல்லும் பஸ்சேவைக் முள்ளியவளைக் கூடாகவும் சேவைக்கு விட்டால் அப்பகுதிப்பிரயாணிகளுக்கும் வசதியாகவிருக்குமென இ. போ. ச. அதிகாரிகளை பிரயாணிகள் கேட்டுள்ளனர்.

# சக்திபடைத்த நாம் தூங்கவேண்டுமா?

## பொருளாதாரத்தைப் பெருக்க உடுப்பிட்டி எம். பி.கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

சிங்கப்பூரையும், மலையாளத்தையும், தமிழ்மக்கள் நம்பி உயிர்வாழ்ந்த காலம் மலையேறிவிட்டது ஆசைவார்த்தைகளால் மோசம்போய் வாழ்ந்த காலம் முடிவடைந்துவிட்டது. இனிமேல் நாட்டின் முதுகெலும்பாக, தமிழினத்தின் தனிப்பெரும் சின்னமாக கரை தெரியாத் தமிழினத்தின் கலங்கரை விளக்கமான தமிழ் இளைஞர் உலகத்தையே தமிழினம் நம்பியிருக்க வேண்டிய காலம் ஆரம்பித்துவிட்டது.

இவ்வாறு ஞாயிறு பிற்பகல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர் மன்றத்தில் உரைநிகழ்த்திய உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் கூறினர். மாணவர் மன்றத் தலைவர் திரு. வி. தங்கேஸ்வரன் தலைமை தாங்கினர்.

பொருளாதார அபிவிருத்தி பற்றித் திரு. சிவசிதம்பரம் குறிப்பிடுகையில் கியூபா, இஸ்றேல் போன்ற இலங்கையிலும் சிறியநாடுகள் காட்டை நாடாக்கி, பாலைவனத்தைச் சோலையாக்கி, வளங்காண முடியுமாயின், இயற்கையிலேயே தொழிலார்வமும் சிக்கன வாழ்வும் பரம்பரைப் பண்புகளாக கொண்ட நாம் தூங்கிக்கிடக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறினர்.

"பல நூற்றாண்டுகளாகச் சாபக்கேடாக நிலவி வரும் சாதிக் கட்டுப்பாட்டை ஒழித்துக் கட்டி, ஒவ்வொருவரும் தொழில் மகத்துவத்தை உணர்ந்து தலைநிமிர்ந்தால், தேனும் பாலும் வழிந்தோடும் என்பது திண்ணம் என்று திரு. சிவசிதம்பரம் கூறினர்.

## வேலணையில் பாரதி விழா

ஊர்காவற்றுறை, புதன்

வேலணை-வடக்கு "ஆத்திசூடி" வித்தியாசாலையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை பாரதிவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வேலணை - வடக்கு பாரதி இளைஞர் கழகத்தாரால் நடத்தப்பட்ட இவ்விழாவுக்கு வித்துவான் பொன்னையனர் தலைவகித்தார்.

திரு. ஆனந்தசங்கரி, புதுமைலோலன், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர்கள் பிரதான பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் திரு. மு. மாணிக்கவாசகர் திரு. லோகேஸ்வரன், திரு. விஜயகுமார் ஆகியோரும் 'ஆத்திசூடி' வித்தியாலய மாணவிகளும் பாரதியார் பாடல்கள் பாடினர்.

## கஷ்டங்களை சமாளிக்கவேண்டும்

றம்புக்கனை, செவ்வாய்

"ஒரு நாடு முன்னேறவேண்டுமென்றல், அது பல கஷ்டங்களையும் சமாளித்தே தீரவேண்டும்" என்று றம்புக்கனையிலுள்ள கற்றவெல உபதபாற்கந்தோர் டெலிபோன் சேவையைத் திறந்துவைத்த நீதி உதவி மந்திரி திரு அசோகா மகாகாமகருணாரத்ன கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசாங்கம் எந்தவகையிலும் வீழ்ந்துவிடாது என்றும் கூறினர்.

## 'கோவில் சொத்தை கொடுக்கமாட்டேன்'

### தேரோ அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

'பிறின்ஸ்' கல்லூரியின் காணிநிலத்தையும் கட்டடங்களையும் அரசாங்கம் தனது சொத்தாக்கிக் கொள்வதற்கு எதிர்ப்புக் காட்டுமுகமாகக் கொட்டாஞ்சேனையிலுள்ள தீபதுட்டமராமைக் கோவிலின் போதன மண்டபத்தின் மூன்றடுக்குக் கட்டிடத்தைச் சுற்றிப் பெருந்தொகையான மக்கள் கூடினர். கடந்த டிசம்பர் மாதத்தில் அரசாங்க பள்ளிக்கூடமாக மாற்றப்பட்டது. தீபதுட்டமராமாக் கோவிலுக்குச் சொந்தமான நிலத்திலேயே 'பிறின்ஸ்' கல்லூரி அமைந்துள்ளது. கோவிலின் தலைமை பிக்குவாகியமடம்பிட்டியாஜின்னனந்தாதேரோ நேற்று முன்தினம் மேற்குமாகாணக் கல்வி அதிகாரியிடம் கட்டடத்திறப்புகளைக் கொடுப்பதற்கு மறுத்தார். 'பிறின்ஸ்' கல்லூரியை அரசாங்கம் எடுப்பது பற்றி எனக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை. ஆனல் கோவில் சொத்தை அரசாங்கத்திடம் நான் ஒப்படைக்கமாட்டேன்" என்று மடம்பிட்டியா ஜின்னனந்ததேரோ கூறினர்.

கல்வி இலாகா அதிகாரிகள் அவ்விடத்தைவிட்டுச் சென்றபின் கோவிலில் கூடிய மக்களனைவரும் கலைந்தனர். கல்வி அதிபர் திரு. எச். ஏ. வி. சொய்சாவிடம் பொளத்தபிக்கு ஒரு எழுத்து மூலத்தைக் கொடுத்தார்.

## விளையாட்டு கழக நிர்வாகிகள் தெரிவு

மாவிட்டபுரம், செவ்வாய்

மாவிட்டபுரம் சைவ மகாசபை விளையாட்டுக் கழகத்தின் கூட்டமொன்று மகாமாரியம்மன் கோவில் மண்டபத்தில் ஆசிரியர் சி. அம்பலப்பிள்ளையின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அத்தருணம் நடப்புவருட நிருவாகிகளாகப் பின் வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. அம்பலப்பிள்ளை. தலைவர்: சி. கந்தையா. உபதலைவர்: க. புண்ணியமூர்த்தி. காரியதரிசி: க. சின்னத்துரை. உபகாரியதரிசி: சோ. சேனதிராசா. தனதிகாரி: வே. ஜெயராசசிங்கம்.

## தமது தொகுதியில் நெசவுசாலை இல்லையாம்

### எம். பி. புகார்

பத்தேகம, செவ்வாய்

'சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்த அரசாங்கம் 1000 நெசவுசாலைகளை இங்கு நிறுவத் தீர்மானித்திருந்தது. ஆனல் பத்தேகமத்தில் ஒரு நெசவுசாலையையாகுதல் இந்த அரசாங்கத்தால் நிறுவ முடியவில்லை.'

இவ்வாறு பத்தேகம எம். பி. திரு. நீல்டி அல்விஸ் இங்கு நடைபெற்ற கிராமாவிருத்திச் சங்கக் கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

பீ. சீ. சீ. சந்தண சோப்




முகம்மதுஅலி அப்துல்அலி

பெரியகடை, யாழ்ப்பாணம்.

# தோட்டப்பாடசாலை ஆசிரியரின் விசாவரி

## விலக்களிக்க ஆசிரியர் . சங்கம் கோரிக்கை

பதுளை, புதன்

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு விசாவரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றுஊவா மாவட்ட தோட்டப் பாடசாலை ஆசிரியர்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் பதுளை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் திரு. வி. ஆர் ஜோன் தலைமையில் நடைபெற்றது.

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களின் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் 72 ரூபாய்தானென்றும் எனவே 400 ரூபாய் விசாவரி அவர்களால் செலுத்த முடியாதென்றும் அவர்களுக்கு விசாவரியிலிருந்து விலக்களிக்கப்படவேண்டுமென்று அந்தத் தீர்மானம் கோருகிறது.

மகாநாட்டில் நிறைவேறிய இதர தீர்மானங்கள் வருமாறு:

தோட்டப்பாடசாலை ஆசிரியர்சங்கமும். தமிழ் ஆசிரியர் சங்கமும் ஒன்றுக இணைந்து சேவைசெய்யவேண்டும்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தினுல் உணவுப் பொருக்கள் அத்தியாவசியப் பொருள்களின் விலை கூடியதால் வாழ்க்கைச்செலவு அதிகரிந்துள்ளது. தற்போது வழங்கப்படும் விஷேச சகாயப் பணம் 5 ரூபாயை 17 ரூபாய் 50 சதமாக உயர்த்தப்படவேண்டுமென இச் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

சேவைக்காலத்தராதரப் பத்திரம் பத்து வருடங்களுக்குப் பின் ஆசிரியர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கொடுப்பதை நிறுத்தி யூனியன்மூலமாகக் கொடுக்கவேண்டுமென கல்வி அதிகாரியை இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அண்மையில் சம்பளக் கமிஷன் வெளியிட்ட அறிக்கையின்படி தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டும்.

ஆசிரியகலாசாலை பிரவேசப் பரீட்சையில் சித்தியடைந்த தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சிபெற அனுமதி கொடுக்காமலும் அரசினர் பாடசாலைகளில் வேலை கொடுக்காமலும் இருப்பதைச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. வி. ஜோன். உப தலைவர் திரு. சத்தியநாதன், காரியதரிசி திரு. எம். சுப்பையா உப காரியதரிசி திரு. அசரியா சலான். தனதிகாரி தரு. எஸ். விஸ்வலிங்கம். கணக்குப் பரிசோதகர் திரு. பி. சாமுவேல் டேவிட். கமிட்டி அங்கத்தவர்கள் ஏழுபேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## பரிபூரண ஆயுத தடைக்கு வேண்டுகோள்

பிரஸல்ஸ், செப். 27

பரிபூரண ஆயுததடையை மேற்கொள்ள வேண்டுமென இங்கு நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மகாநாடு நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அமெரிக்க தூதுக்குழு ஆதரவளித்துள்ளது.

இம் மகாநாட்டின் ஐம்பதாவது கூட்டம் வெள்ளியன்று முடிவடைந்தது. சோவியத் முகாமை தவிர்ந்த ஏனையநாடுகளின் பிரதிநிதிகள் அனைவரும் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர். இம் மகாநாட்டில் 61 நாடுகளைச் சேர்ந்த 500 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

---

## பிரதம லிகிதருக்கு 3 வருட கடுங்காவல்

தெஹிவளை, புதன்

கொழும்பு பால்சபை கணக்குப் பகுதியின் முன்னுள் பிரதம லிகிதர் திரு. சி. சதாநந்தனுக்கு கொழும்புதெற்குமாஜிஸ்திரேட் மூன்று வருடக் கடுங்காவல் தண்டனையும் ரூ. 3,000 அபராதமும் விதித்துள்ளார். பால் சபைக்குச் சொந்தமான ரூ. 10,052 - 89 சதம் மோசடி செய்ததாயும், பற்றுச்சீட்டுக்களைக் களவாக மாற்றியதாயும் ஆதாரமற்ற தஸ்தாவேஜுக்களை உபயோகித்ததாகவும் இவர் மீது சாட்டப்பட்டிருந்த குற்றங்களுக்காகவே இந்தத்தண்டனை அளிக்கப்பட்டது.

---

## அக். 1-ல் சீன குடியரசு தினம்

கொழும்பு, புதன்

இலங்கை-சீன நட்புறவு சங்கம் வருகிற அக்டோபர் முதல் திகதி சீனக்குடியரசு தினத்தைக் கூட்டாகக் கொண்டாடும். நாட்டின் பல பகுதிகளில் இது சம்பந்தமாகப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

---

## 50 முதியோர் கல்வி நிலையங்கள்

கொழும்பு, புதன்

ஹிங்குரா கொடையில் 50 முதியோர் கல்விநிலையங்களைத் திறக்க ஏற்பாடு செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

---

## 400 கோடி டாலர் வெளிஉதவி

வாஷிங்டன், செப். 27

400 கோடி டாலர் வெளி உதவி அளிக்கும் ஒரு திட்டத்தை அமெரிக்க பார்லிமெண்ட் இன்று அங்கீகரித்தது.

---

## தேசிய திரைப்பட நிலையம்

கொழும்பு, புதன்

இலங்கையில் தேசிய திரைப்பட நிலையம் ஒன்றை இலங்கை கலைக் கழகம் நிறுவும் என அறிவிக்கப்படுகிறது.

---

## ஸ்ரீமுருகன் இளம் விவசாயக் கழகம்

பண்ணுகம், புதன்

ஸ்ரீமுருகன் இளம் விவசாயக் கழகக் கூட்டம் கடந்த 23 ம் திகதி பண்ணுகம் விசவத்தனை கோவிலில் ச. கனகரசன் தலைமையில் ஆரம்பமானது. காரியதரிசியின் அறிக்கை சபையோரினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தனதிகாரியின் வரவு செலவு விபரம் வாசிக்கப்பட்டது.

---

## "இலங்கையின் தேயிலை உற்பத்தி பாதிக்கும்"

லண்டன், செப். 27

பிரிட்டன் நிபந்தனையின்றி ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேருமானுல் இலங்கையின் தேயிலை உற்பத்தி பாதிக்கப்படும் என சாம்ராஜ்ய பாராளுமன்ற மகாநாட்டில் உரை நிகழ்த்திய இலங்கைப் பிரதிநிதி செனட்டர் சொய்ஸா அறிவித்தார்.

---

## நாவாந்துறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கேட்ட நீதியரசர் இனிமேல் நீர் இங்கு வரக்கூடாதென்று எச்சரிக்கையும் செய்தார். அத்துடன் பொலிஸ் இன்ஸ்பெக்டரை அழைத்து, குறிப்பிட்ட அந்நபரை இனிமேல் கோர்ட்டுக்குள் நுழைய விடாது பார்க்கும்படியும் உத்தரவிட்டார்.

---

# ஐ. நா. தலைமைக்காரியதரிசி பதவிஇன்னும்முடியவில்லை

## இடைக்கால ஏற்பாட்டுக்கு ரஷ்யாவின் புதிய யோசனை

நியூயோர்க், செப். 27

திரு. ஹமர்ஷில்டின் மரணத்தினுல் காலியான ஐ நா. பொதுக்காரியதரிசி பதவிக்கு தலைமைக்காரியதரிசியாக ஒருவரையும் துணைக் காரியதரிசிகளாக கிழக்கு, மேற்கு, நடுநிலைமை நாடுகளைக்கொண்ட மூவரையும் ஒரு இடைக்கால ஏற்பாடாகநியமிக்கலாமென்று சோவியத் யூனியன் யோசனை கூறியுள்ளது.

ஐ. நா. பொதுக்காரியதரிசி ஒருவருக்குப் பதிலாக கிழக்கு மேற்கு நடுநிலைமை நாடுகளைக் கொண்ட 'முத்தரப்பு' நிர்வாகக்குழு நியமிக்கப்படவேண்டுமென்று சோவியத் யூனியன் ஒருவருடத்துக்கு மேலாக கூறிவருகிறது,

திரு ஹமர்ஷில்டின் மரணம் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்கு ஒரு இடைக்கால ஏற்பாடாக தலைமைக்காரியதரிசி பதவிக்கு ஒருவரையும் துணைத் தலைமைக் காரியதரிசிகளாக மூவரையும் நியமிக்கலாமென்று நேற்று பாதுகாப்புச்சபைத் தலைவர் திரு. பார்ன்ஸ் கூட்டிய ஒரு பூர்வாங்க ஆலோசனை மகாநாட்டில் சோவியத் பிரதிநிதி ஸோரின் தெரிவித்தார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லையாம். தலைமைக் காரியதரிசி பதவிக்கு ஒருவர்தான் நியமிக்கப்படவேண்டுமென்று அவைகள் வற்புறுத்தின.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைமைப்பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. முடிவு எதுவும் ஏற்படாமல் ஒத்திவைக்கப்பட்ட இக்கூட்டம் மீண்டும் எப்பொழுது கூடுமென்று திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

---

# ஐ. நா. காரியதரிசி பதவியும் நேருவும்

## திரு. ரஸ்க் அறிக்கையில் வெளியாகும் ஹேஷ்யம்

ஐ. நா. (நியூயார்க்), செப். 27

ஐ. நா. காரியதரிசி பொறுப்பை பிரதமமந்திரி நேரு ஏற்கவேண்டும் என்று மான்ஸ்பீல்ட் தெரிவித்த யோசனை, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டீன் ரஸ்க் வெளியிட்ட அறிக்கை பற்றி ஹேஷ்யங்களை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளிக்கிழமையன்று முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு நிகழ்த்தப்பட்ட ஒரு பிரசங்கத்தில்,ஐ.நா. நிர்வாகப் பொறுப்பை ஏற்கத் தற்காலிக அடிப்படையில் சிறந்த உலகத் தலைவரொருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று ரஸ்க் வற்புறுத்தியபோது, ரஸ்கும் இந்த யோசனையை மனத்தில் கொண்டுதான் அவ்வாறு கூறியிருக்கிருரோ என்று ஹேஷ்யம் உலவுகிறது.

அந்நிய நிருபர்கள் சங்க விருந்துக் கூட்டமொன்றில் தலைவரின் பெயரைக் குறிப்பிட ரஸ்க் மறுத்துவிட்டார். ஆனுல்,ஐ.நா. வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்படும் பெயர்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒருவரைப் பற்றியே அவர் சிந்தித்துக்கொண்டிருப்பதாகப் பலருக்குத் தோன்றியது.

(ஐ. நா. வட்டாரங்களில் ஸ்தானிகர்கள், நிரந்தரப் பிரதிநிதிகளின் பெயர்களே பிரஸ்தாபிக்கப்பட்டுவந்தன. ஆனுல் அவர்களில் ஒருவருக்காவது 'சிறந்த உலகத் தலைவர்,என்று கூறப்படுவதற்கு வேண்டிய தகுதி இல்லை.)

பிரதம மந்திரி நேரு சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனையைப் பிரபல அமெரிக்க ரேடியோ டெலிவிஷன் ஸ்தாபனம் முக்கிய விஷயமாக்கிவிட்டது. மாஸ்கோவிலும் மற்ற உலகத் தலைநகரங்களிலும் சர்க்கார்களாலும் சாமானிய மனிதர்களாலும் இந்த யோசனை எப்படி வரவேற்கப்படுகின்றன என்று தன்னுடைய அயல் நாடுகளிலுள்ள நிருபர்களைக் கேட்டிருக்கிறது.

முதலில் இந்த யோசனை காரிய சாத்தியமற்றதாகத் தோன்றலாம் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்தியப் பிரதம மந்திரியாக அவர் இருப்பது இன்றியமையாதது என்று கருதப்படும்போது தற்காலிகமாகக்கூட அவரது சேவையை ஐ. நா. வுக்கு எப்படி அளிக்க முடியும் என்று கேட்கப்படலாம்.

எனினும் காலஞ் சென்ற ஜனுதிபதி ரூஸ்வெல்ட், தனது ஜனுதிபதி பதவிக் காலம் முடிந்தவுடன் ஐ. நா. காரியதரிசிப் பதவியை ஏற்றுக்கொள்ள ஒரு சமயம் நினைத்ததாகக் கூறப்பட்டது என்று இங்கு நினைவுறுத்தப்படுகிறது.

எந்த மனிதரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய, குறிப்பாக மனித வர்க்கம் அணு ஆயுதங்களினுல் நிர்மூலமாக்கப்படும் அபாயம் எதிர் நோக்கியிருக்கும்போது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பெரிய பதவி என்றே காரியதரிசி பதவி பற்றிக் கருதப்படுகிறது.

---

## பரிசுபெற்ற எழுத்தாளருக்கு மகாசபை பாராட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கூட்டம் ஒன்று சமீபத்தில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

"சிறு கதை எழுத்தாளர் திரு. டொமினிக்ஜீவா எழுதிய 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற நூலுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலம் ரூ. 1000 பரிசளித்திருப்பதை யிட்டு, அவர் மகா சபையின் முக்கிய அங்கத்தவர் என்ற முறையில் மகாசபை பெருமையடைகின்றது. இவரின் எழுத்தாற்றல் பன் மடங்கு வளர்ச்சியுற்று நாட்டுக்குப் பயனளிக்க வேண்டுமென மகாசபை வாழ்த்துகின்றது".

---

## பஸ் விபத்தில் தந்தையும் மகனும்

தெல்தனியா, புதன்

கண்டி — மூனிப்பே வீதியில் நடைபெற்ற ஒரு பஸ் விபத்தில் ஆறுபேர் காயமடைந்துள்ளனர். பஸ்ஸில் பிரயாணம் செய்த தோமஸ் பெரேரா (45) அவருடைய மகன் இந்திரசேன (11), கண்டக்டர் லெஸ்லி வில்ஸன் ஆகியோர் பலத்த காயத்துடன் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

---


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீபொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல்2-30

ஜெமினி கணேசன், சரோஜாதேவி
நடித்த

இல்லறமே நல்லறம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.